பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 28 | சனிக்கிழமை 12.01.2019 | கதிர் 68

**இது ரகசியம் அல்ல!**

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' – என்பார்கள்.

அந்த மாதிரி ஆகியிருக்கின்றது தமிழரசுக் கட்சிப் பிரமுகர் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் கொழும்பு 'டீல்' பேச்சு!

கொழும்பில் நடந்த ஒரு விவாத நிகழ்ச்சியில் உரை பக்கம் 02



# மஹிந்த தரப்பினர் படுமோசமானோர் அவர்கள் போலித் தேசப்பற்றாளர்கள்!

## அரசமைப்புப் பேரவையில் சம்பந்தன் சாட்டையடி
## புதிய அரசமைப்பு மிக அவசியம் எனவும் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 12

மஹிந்த ராஜபக்ஷ அணியினரே! நீங்கள் தேசப்பற்றாளர்களாக நடிக்க வேண்டாம். நீங்கள் போலியான தேசப்பற்றாளர்கள். நீங்கள் படுமோசமானவர்கள். சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தைத் தூண்டுகின்றீர்கள்.

- இவ்வாறு நேற்று அரசமைப்புப் பேரவையில் மஹிந்த தரப்புக்குச் சாட்டையடி கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பக்கம் 11



## ஓர் இனம் இன்னோர் இனத்தை அடக்கி ஒடுக்கி ஆளவேகூடாது
### சபையில் நேற்று மஹிந்த உபதேசம்

கொழும்பு, ஜன. 12

ஓர் இனம் மற்றுமோர் இனத்தை அடக்கி ஒடுக்கி மிதித்து ஆள முற்படக்கூடாது. நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்தார்.

அரசமைப்புப் பேரவை பக்கம் 11

புதிய அரசமைப்பு குறித்து
## மஹிந்த அணியினர் போலிப் பிரசாரங்கள்
### வெட்கமில்லையா என்று ஜே.வி.பி. கேள்வி



கொழும்பு, ஜன. 12

புதிய அரசமைப்பு தொடர்பில் மஹிந்தவும், அவரின் சகாக்களுமே விகாரை, விகாரையாகச் சென்று போலிப் பக்கம் 11

## புதிய அரசமைப்பை உருவாக்க பொன்னான தருணம் இதுவே!
### கூட்டமைப்பு ஒருபோதும் பின்வாங்காது சபையில் சுமந்திரன் எம்.பி. எடுத்துரைப்பு



கொழும்பு, ஜன. 12

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான இந்தப் பொன்னான தருணத்தை நாம் இழந்துவிடக்கூடாது எனவும், புதிய பக்கம் 11

## அரசில் இணைந்து அமைச்சராகுங்கள்! கூட்டமைப்பை அழைக்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஜன. 12

அரசுடன் இணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு நேற்று அழைப்பு விடுத்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

அரசமைப்புப் பேரவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து பக்கம் 11

## வடக்கு மாகாண அபிவிருத்திக்கு முழு நிர்வாக அதிகாரம் தேவை
### அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தல்



கொழும்பு, ஜன. 12

வடக்கு மக்களுக்கு இருப்பது, சாதாரணப் பொருளாதார பிரச்சினையெனத் பக்கம் 11

## வடக்குப் பாடசாலைகளுக்கு திங்களும் பொங்கல் விடுமுறை

யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி திங்கள்கிழமை வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 11

## அரசியல் கைதிகளுக்கு விரைவில் நல்ல செய்தி!
### நீதி அமைச்சர் நேற்று உறுதி

கொழும்பு, ஜன. 12

நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு விரைவில் பக்கம் 11

## ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மைத்திரி - மஹிந்த மோதல் உச்சம்!



கொழும்பு, ஜன. 12

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறங்குவார் என்ற எதிர்பார்ப்பு பக்கம் 11

## புதிய அரசமைப்பினால் நாடு பிளவுபடமாட்டாது
### பிரதமர் ரணில் உறுதியளிப்பு

கொழும்பு, ஜன. 12

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கோ அல்லது பௌத்த மதத்துக்கு உரித்தான பிரதான இடத்தை இல்லாமல் ஆக்குவதற்கான ஏற்பாடுகளோ புதிய அரசமைப்பில் எந்தவொரு இடத்திலும் இல்லை எனப் பிரதமர் ரணில் பக்கம் 11

## ஆள்கடத்தல்காரர்களிடம் 24 இலங்கையர்கள் மீட்பு!
### மலேசியப் பொலிஸார் அதிரடி

கோலாலம்பூர், ஜன. 12

மலேசியாவிலிருந்து ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு ஆள்களை கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கையர்களைக் கைது பக்கம் 02

## வடக்கில் இராணுவத்தினர் இருந்த இடங்களில் மனிதப் புதைகுழிகள்!
### அனந்தி சசிதரன் புதிய தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 12

வடபுலத்தில் இராணுவம் நிலைகொண்டிருந்த அனைத்து இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் உள்ளன என்று ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகமும், முன்னாள் வடக்கு பக்கம் 11

# வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்திகள் நடமாடும் சேவை ஊடாக விற்பனை



யாழ்ப்பாணம், ஜன. 12

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களை, நடமாடும் சேவைகள் ஊடாக மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வட. மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக் களத்தின் உதவியுடன் நடத்தப்படும் இந்த விற்பனை, எதிர்வரும் திங்கட் கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் மக்கள் கூடும் இடங்கள், சந் தைகள் போன்ற இடங்களில் இந்தநடமாடும்விற்பனைசேவைகள்இடம்பெறுகின்றன.

தற்காலத்தில் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்ரிக் , பொலித்தீன் போன்ற உக்காத மூலப் பொருட்களில் செய்த பொருட்கள் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன.

இதனால்சூழலுக்குப்பெரும்பாதிப்புஏற்படுகின்றது. இவற்றைஇயன்றளவுமக்கள்தவிர்த்துக்கொள்ளவே இவ்வாறான நடவடிக் கையை மேற்கொண்டுள்ளோம்.

அதேநேரம் உள்ளூர் உற்பத்திகள் பெருமளவு சந்தைக்கு வருகின்றன. அவற்றுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்து, அவற்றைக் கொள்வனவு செய்வதன் ஊடாகவே உள்ளூர் உற்பத்தியாளர்களை வளர்க்க முடியும் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய சயந்தன் தமிழ் ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையில் ஏற்பட்ட ஒரு டீல்தான் கூட்டமைப்பின் பிறப்பாக்கம் என்று கூறியிருந்தார்.

ஒருபுறம் நீலன் திருச்செல்வம், தங்கத்துரை என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் வரிசையாகக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளைத் தடுத்து, தவிர்க்கச் செய்ய வேண்டிய தேவை ஜனநாயக வழி தலைவர்களுக்கு இருந்தது. அதேசமயம், ஜனநாயக வழியில் காய்களை முன்நகர்த்த வேண்டிய தேவையும் கட்டாயமும் புலிகளுக்கு இருந்தன. இந்த இரண்டு தரப்புகளினதும் தேவைகளை நிறைவுசெய்யும்டீலின்பெறுபேறுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்ற சாரப்பட சயந்தன் பேசியிருந்தார்.

இந்தப் பேச்சு பலத்த சலசலப்பையும் அதிருப்திகளையும் ஏற்படுத்தியிருந்த பின்னணியில் –

*“இப்படிச்சிக்கல்களை ஏற்படுத்தும் உரைகளைப் பேச வேண்டாம் என்று உங்கள் நம்பிக்கைக்குரிய உதவியாளரான சயந்தனுக்கு நீங்கள் ஆலோசனை கூறுவதில்லையா?”* – என்று சுமந்திரனிடம் அண்மையில் நான் கேட்டிருந்தேன்.

*“உண்மை கூறுபவர்களை, அப்படிக் கூறவேண்டாம் என்று நான் எப்படி மறிக்க முடியும்?”* – என சுமந்திரன் என்னிடம் திருப்பிக் கேட்டார் என இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இந்த ‘டீல்’ பேச்சு குழப்பத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

சயந்தனின் ‘டீல்’ பேச்சால் கடுப்பாகிப் போன வன்னி மாவட்ட எம்.பியான சாள்ஸ் நிமலநாதனும், யாழ்.மாவட்ட எம்.பியான ஸ்ரீதரனும் அது பற்றிக் காட்டமாக விமர்சித்தனர்.

*“ஏன் இந்த ‘டீல்’ பேச்சு? எதற்காக சும்மா விடுதலைப் புலிகளின் பெயரோடு சொறிவான்? இந்தப் பேச்சால் எங்களுக்குத்தான் சிக்கல். போகின்ற இடம் எல்லாம் எங்கள் ஆதரவாளர்கள் இதனைக் குறிப்பிட்டு எங்களை நோண்டி நுங்கு எடுக்கின்றனர். இப்படி எல்லாம் பேசுவதற்கு கட்சி இடமளித்துப் பார்த்திருக்கப் போகின்றதா?”* – என்ற சாரப்பட சீறினர் இருவரும்.

உடனேசுமந்திரன்குறுக்கிட்டார்.

*“சயந்தன் கூறியதில் என்ன தவறு? புலிகள் எங்கள் அரசியல் வாதிகளைக் கொல்லவில்லையா?”* – என்று கேள்வி எழுப்பினார் அவர்.

அதனால் விடயம் விவகாரமாகியது. சூடு பறந்த கருத்துக்கள் பறிமாறப்பட்டன.

இடையில் குறுக்கிட்டராம் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா.

*“ஜனநாயக வழியில் அரசியலில் ஈடுபட்டவர்களைப் புலிகள் கொன்றார்கள்தானே. புலிகள் தமது இயக்கத்திலேயே மாத்தையா உட்பட இருநூறு பேரைக் கொல்லவில்லையா?”* – என்று கேள்வி கேட்டார் அவர்.

*“அப்படி என்றால் ஒன்றாகப் போய் தலைவர் பிரபரகரனுடன் அமர்ந்து சாப்பிட்ட போது இந்தக் கொலைகளைப் பற்றி நீங்கள் அவரிடமே கேட்டறிந்திருக்கலாமே? அவர் உங்களிடம் சொன்னாரா இவற்றை எல்லாம் தாங்கள்தான் செய்தார்கள் என்று?”* – என உணர்ச்சியுடன் பதில் வினாத் தொடுத்தார் ஸ்ரீதரன் எம்.பி.

இதனால் கூட்டம் சூடேறியது.

எனினும், கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தலையிட்டு இரு தரப்பினரையும் பேசவிடாது அடக்கினார்.

*“இந்த விடயத்தை விட்டுவிட்டு நாங்கள் பேச வேண்டிய பல முக்கிய அவசர விவகாரங்கள் இருக்கின்றன. அவைபற்றிப் பேசுவோம். அரசமைப்பு உருவாக்க விவகாரம், விரைவில் நடைபெறப் போகும் ஜெனீவாக் கூட்டம், நமது மக்களுக்குரிய வீட்டுத்திட்டம் ஆகியன குறித்து இப்போது பேசுவோம்.”* – என்று சமரசம் பண்ணினார் சம்பந்தன்.

சயந்தனோ, சுமந்திரனோ, ஸ்ரீதரனோ, சாள்ஸ்நிமலநாதனோ புலிகளின் காலத்தில் – அல்லது தமிழ்க் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் – அரசியல் செய்தவர்கள் அல்லர். அவர்களை விட்டுவிடுங்கள்.

ஆனால் மாவை சேனாதிராசா அப்படி அல்லர். தலைவர் பிரபாகரனுடன் நீண்ட காலம் பழகியவர். மாவையின் அரசியல் வாழ்வு உயர்ச்சியில் தலைவர் பிரபாகரனுக்கும் பங்குண்டு என்பதை நானும் கூட அறிவேன்.

புலிகள் அமைப்பு இருந்த காலம் வரை அவர்களுக்குச் சற்றேனும் அதிருப்தி வந்துவிடக் கூடாது என்பதற்காகப் பார்த்துப் பார்த்துப் பக்குவமாகப் பேசி – நடந்து கொண்ட மாவையர் –

அவரது தானைத் தலைவர் அமிர்தலிங்கம் தமது கண் முன் சுட்டுக் கொல்லப்பட்டமையை அவதானித்த பின்னர், புலிகளை எந்தச் சமயத்திலும பகிரங்கமாக வையாமல் சகிப்புடன் தந்திரோபாயப் பொறுமையை வெளிப்படுத்திய மாவையர் –

தேர்தல் மேடைகளில் புலிகளைப் புளுகியே வாக்குத் திரட்டிய மாவையர் –

இப்போது அப்படி புலிகளைக் காட்டமாக விமர்சித்திருப்பாராயின் –

அது பச்சை சந்தர்ப்பவாதக் கருத்துரைப்பே தவிர வேறியில்லை.

**- மின்னல் -**

## ரெலோவின் தலைமைக்குழு இன்று திருமலையில் கூடுகிறது

கொழும்பு, ஜன.12

ரெலோ கட்சியின் 27 உறுப்பினர்களைக் கொண்ட தலைமைக் குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அக்கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சமகால அரசியல் நிலைமை, நேற்றுக் கூடிய அரசமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நிபுணர் குழுவின் யோசனைத் திட்டம் ஆகியவை உட்படப் பல விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம், நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கல்முனையில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர் அணி மற்றும் மாவட்டக் குழு தெரிவுகள் நடைபெற்றன.

இன்று திருகோணமலை மாவட்டத்துக்கான கடசியின் இளைஞர் அணி, மாவட்டக்குழுத் தெரிவும் இடம்பெறவிருக்கின்றன.

நேற்றைய கல்முனைக் கூட்டத்தில் ரெலோவின் தவிசாளர் சிவாஜிலிங்கம், செயலாளர் நாயகம் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, ஜனா கிருஷ்ணமூர்த்தி, பிரசன்னா இந்திரகுமார், ஹென்றி மகேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் குகதாஸ் உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்றினர். (உ)

## காரைநகரில் டெங்கு ஒழிப்பு வீடு வீடாகச் சென்று சோதனை



யாழ்ப்பாணம், ஜன. 12

காரைநகரில் நேற்று வெள்ளிக்கிழமை டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இடம்பெற்றது.

காரைநகர்ஜே/42,ஜே/48 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பிரிவு மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றுக்கு நேரடியாகச் சென்று சோதனைகளில் ஈடுபட்டனர்.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் அவதானிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் மூலம் உடனடியாகவே சுத்தம் செய்யப்பட்டது.

ஆட்களற்ற வெற்றுக் காணிகளுக்கு எச்சரிக்கை அறிவித்தல் ஒட்டப்பட்டது.

குடம்பிகள் உற்பத்தியாகக்கூடிய வகையில் கிணறுகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிலருக்கு அவற்றைச் சுத்தம் செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. (ஐ)

## ஹிஸ்புல்லாவுக்கு எதிராக போராட்டம் விசாரணையில் இறங்கியது பொலிஸ்!

மட்டக்களப்பு, ஜன. 12

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இடம்பெற்ற ஹர்த்தாலை முன்னிட்டு மட்டக்களப்பு நகர் பகுதியில் பூட்டப்பட்டிருந்த இரு அரச வங்கிகள் மற்றும் பூட்டப்பட்ட கடைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு மக்கள் ஒன்றியம் எனும் தலைப்பில் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக நேற்றுப் பூரண ஹர்தாலுக்கு துண்டுப்பிரசுரம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனையடுத்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய இரு அரச வங்கிகள் மூடப்பட்டன. இது தொடர்பாகவும் மற்றும் பூட்டப்பட்டிருந்த கடைகள் மற்றும் கிண்ணியடி பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஹர்த்தாலுக்கு யார் அழைப்பு விடுத்தது? அத்துடன் கடைகளை யார் பூட்டுமாறு வற்புறுத்தியது? போன்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என அந்த அதிகாரி தெரிவித்தார்.(ஐ)

## ஆள்கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளதாகத் தெரிவித்துள்ள மலேசியப் பொலிஸார், அவர்களிடமிருந்து 24 இலங்கையர்கள் உட்பட 34 பேரை மீட்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

மலேசியப் பொலிஸ்மா அதிபர் டன் சிறி முகமட் பியுஜி ஹருன் இதனை அறிவித்துள்ளார்

மீட்கப்பட்டுள்ளவர்களில் எட்டு பெண்கள் உட்பட 24 இலங்கையர்களும் 10 இந்தியப் பிரஜைகளும் உள்ளனர் என அவர் கூறினார்.

சட்டவிரோதமாக மலேசியாவுக்குள் நுழைந்து தங்கியிருந்த குற்றச்சாட்டில் மூன்று இலங்கையர்களைக் கைதுசெய்துள்ளோம். இவர்களே ஆள்கடத்தலில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட நபர்கள் படகொன்றைக் கொள்வனவு செய்துள்ளமையும் மூன்று படகு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தமையும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது எனவும் மலேசியப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இவர்கள் நியூசிலாந்து, ஆஸ்திரேலியாவுக்கு ஆட்களைக் கடத்தும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், 2018 நடுப்பகுதி முதல் மலேசியாவைத் தளமாக கொண்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முறியடித்துள்ளோம் எனவும் கூறினார். (ஐ)

# சட்டவிரோத மீன்பிடி வடக்கில் தொடர்கிறது

## மீனவர் இணையத் தலைவர் ஆலம் குற்றச்சாட்டு

மன்னார், ஜன. 12

வடக்கில் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என வடக்கு மாகாண மீனவர் இணையத் தலைவர் ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.



வடக்கு மாகாண மீன்பிடி இணையத்தின் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சட்டவிரோத மீன்பிடி முறைமையான சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், சிலிண்டர் தொழில் என்பன தற்பொழுதும் வடக்கில் இடம்பெறுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார், பள்ளிமுனை, பள்ளிக்குடா, பூநகரி உள்ளிட்ட பகுதிகளில் இந்த சட்டவிரோத மீன் பிடி முறைமையை பயன்படுத்தியே பலர் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

எனினும் அவர்களைக் கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை– என்றார். (ஐ)

# கிரவல் மண்ணை கடத்திய மூவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஜன. 12

வவுனியா – செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக கிரவல் மண்ணை ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர் வாகனங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியூடாகச் சென்ற டிப்பர் வாகனங்களை பொலிஸார் சோதனைக்குட்படுத்தியபோதே மூவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# முஸம்மிலுக்கு புதிய பதவி

கொழும்பு, ஜன. 12



கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர்ஏ.ஜே.எம்.முஸம்மில் மத்திய வங்கியின் சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 3 வருட காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## மேல்மாகாண சபை உறுப்பினர்கள் தீர்மானம்

கொழும்பு, ஜன. 12



மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர, மேல் மாகாண சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுடைய ஒருவர், ஆளுநர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளமை குறித்து தமக்கு நம்பிக்கையில்லையெனத் தெரிவித்தே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மேல் மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அன்றைய தினம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றும் வகையில், இரு தரப்பும் கலந்துரையாடி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளது இலங்கை அரசு

## உலகத் தமிழர் பேரவை சாடல்

கொழும்பு, ஜன. 12

இலங்கையின் புதிய இராணுவப் பிரதானியின் நியமனம், ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வியடைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இராணுவப் பிரதானியாகச் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து உலகத் தமிழர் பேரவை நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கை இராணுவத்தின் பிரதானியாகச் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தமிழ் சமூகத்தினர் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இத்தகைய நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஜெனீவாவில் கூடுதல் கவனம் செலுத்திப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

அதுமாத்திரமின்றி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை உண்மையாக நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வி கண்டுள்ளது என்பதனை இந்நியமனம் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளது–என்றுள்ளது. (ஐ)

# தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காக பேயுடனும் கைகோர்ப்பதற்குத் தயார்

## அமைச்சர் பழனி திகாம்பரம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 12



தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக பேயுடனும் கைக்கோர்ப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன். என்று அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அமைச்சர் பழனி திகாம்பரத்தின் 52ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம்ரூபாவைப்பெற்றுத்தருவதாக ஆசை காட்டிய கறுப்புச்சட்டைகாரர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் வெறும் 620 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக ஏற்றுக் கையொப்பமிடத் தயாராகி வருகின்றனர்.

இவ்வாறு காட்டிக் கொடுப்பார்கள் என்று தெரிந்தே, பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடவேண்டாம், தொழிலுக்குச் செல்லுங்கள்எனதொழிலாளர்களிடம் அன்று நான் கோரிக்கை விடுத்தேன்.

இம்முறை தொழிலாளர்கள் ஏமாற்றப்படக்கூடாது. அரசியல் மற்றும் கொள்கை ரீதியில் முரண்பாடுகள் இருந்தாலும் தொழிலாளர்களுக்காக இணைந்து செயற்பட, அழுத்தங்களைப் பிரயோகிக்க நாம் தயார்–என்றார். (ஐ)

# ஜே.வி.பிக்கு ஒரு கோடி ரூபாவை செலுத்துமாறு விமலுக்கு உத்தரவு

கொழும்பு, ஜன. 12

மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு கோடி ரூபாவைச் செலுத்துமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு, கொழும்பு வணிக நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விமல் வீரவன்ஸவினால் எழுதப்பட்டு, அண்மையில் வெளியிடப்பட்டிருந்த நெத்த வெனுவட்ட அத்த எனும் நூலினூடாக, ஜே.வி.பியின் அறிவுசார் சொத்து சூறையாடப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன், இந்த நூல் விநியோகத்துக்கும் நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# மொட்டுக் கட்சி உறுப்பினரின் விளக்கமறியல் நேற்று நீடிப்பு



கொழும்பு, ஜன. 12

தெமட்டகொடை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைமையகத்தில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனகேவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று வெள்ளிக்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை குலதிஸ்ஸ கீகனகேவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் 28 ஆம் திகதி தெமட்டகொடையிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டட வளாகத்தில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இலங்கைக்குத் தகுதி இல்லை

**இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மிக மோசமாக இடமபெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேசப் பொறிமுறை அவசியம் என்பதை மீண்டும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.**

**தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் இலங்கை அரசும் அதன் நீதித்துறை அலகுகளும் பாரபட்சமாக நடக்கின்றன என்பதைத் திரும்பவும் வலியுறுத்திய சுமந்திரன், அதற்கு மிகத் தெளிவான – துல்லியமான – ஆதாரம் ஒன்றையும் முன்வைத்தார். அதுவும் தற்போது நடைமுறையில் வெளிப்படுத்தப்படும் மிக மோசமான பாரபட்சம் ஒன்றையே அவர் வெளிப்படையாக அம்பலப்படுத்தினார்.**

**இலங்கையின் இன மோதலின் உச்சத்தில் கொடூரப் போர் கோர வடிவமாக வெளிப்பட்டது. அந்த மோசமான வன்முறையில் முதலில் களப்பலியாகியது ‘உண்மை’தான்.**

**உண்மைகளை – நிஜத்தை – உலகுக்கு அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்களும் இந்தப் போரின் கொடூரத் தாண்டவத்திலிருந்து தப்ப முடியவில்லை.**

**உண்மைகளை அம்பலப்படுத்திய குற்றத்துக்காக ஊடகவியலாளர்கள் – அவர்கள் தமிழர், சிங்களவர்கள் என்ற வேறுபாடின்றி – படுகொலை செய்ப்பட்டார்கள்.**

**ஆனால் இப்படிப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் விடயம் தொடர்பான அம்சத்தில் கொழும்பு அரசின் புலன்விசாரணைப் பிரிவுகளும், நீதித்துறைகளும் எவ்வாறு பாரபட்சமாகவும் பக்கச் சார்பாகவும் நடந்து கொள்கின்றன என்பதைத் தென்னிலங்கைத் தலைவர்களை முகத்துக்கு நேரே பார்த்துக் கேள்வி எழுப்பினார் சுமந்திரன்.**

***“லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்துகின்றீர்கள். பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை குறித்து இராணுவத் தரப்புக்குள்ளே ஊடுருவிப் புலனாய்வு செய்கின்றீர்கள். ஆள்களைக் கைது செய்கின்றீர்கள். நீதிமன்றத்தின் முன் நிறுத்துகின்றீர்கள். குறைந்த பட்சம் கண்துடைப்புக்காகவும் ஒரு விசாரணை நடைபெறுவதாகக் காட்டுகின்றீர்கள்.***

***“தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தில் என்ன செய்தீர்கள்? யுத்த காலத்தில் பதினைந்து தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அல்லது காணாமலாக்கப்பட்டார்கள். இந்த எண்ணிக்கை ஒன்று, இரண்டு கூடிக் குறைந்ததாக இருக்கலாம். ஆனால் அவர்கள் யார் தொடர்பிலும் முறையான புலன் விசாரணையோ, நீதித்துறை நடவடிக்கைகளோ எடுக்கப்படவேயில்லை.”*** **– என்று சுட்டிக் காட்டிய சுமந்திரன், நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலும் இருந்த தென்னிலங்கை எம்.பிக்களை நோக்கி ஒரு கேள்விக் கணையைத் தொடுத்தார்.**

***“ஊடகவியலாளர்களுக்கான அத்துமீறல்கள், வன்முறைகள் குறித்து அதிகம் பேசுகின்றீர்கள். லஸந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட பற்றி எல்லாம் அதிகம் கூறு கின்றீர்கள். தமிழ் ஊடகவியலாளர்கள் விவகாரத்தைப் பொறுத்த வரை கொல்லப்பட்ட டசினுக்கும் அதிகமான தமிழ் ஊடகவிலாளர்களில் ஒருவரின் பெயரை உங்களால் கூறமுடியுமா?”*** **– என்று சுமந்திரன் கேள்வி எழுப்பிய போது இலங்கை நாடாளுமன்றம் பதிலளிக்க வழியின்றி வாய்மூடி மௌனம் பேணியது.**

**உண்மையை உரைத்த குற்றத்துக்காகக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் விடயத்திலேயே நீதி செய்ய முடியாது இன ரீதியில் பாரபட்சம் காட்டுகின்றன இலங்கையின் சட்ட, ஒழுங்கு மற்றும் நீதித்துறைகள்.**

**இருண்ட யுக காலத்தின் போது படுகொலை செய்யப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்கள் விடயத்தில் புலனாய்வு மற்றும் விசாரணைகளை முன்னெடுக்கும் இலங்கையின் சட்டப் பிரிவுகள் அக்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தில் ஏதும் செய்யாமல் ஓரவஞ் சனை காட்டுகின்றன. தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைகளையும் ‘பயங்கரவாதிகளின் அழிப்பு’ ஆக அது கருதிச் செயற்படுகின்றது.**

**இத்தகைய புலனாய்வு மற்றும் விசாரணைத் துறையையும் நீதித்துறையும் வைத்திருக்கும் இலங்கை அரசு, யுத்தக் குற்றங்கள் விடயத்தை விசாரிக்கும் தகுதியும் ஒழுங்கும் தனது புலனாய்வுப் பிரிவுக்கும், நீதி விசாரணைப் பிரிவுக்கும் உள்ளன என்று கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயலன்றி வேறில்லை.**

**யுத்தக் குற்றங்கள் இழைத்த தரப்புகளில் ஒன்று – அல்லது பிரதான தரப்பு – இலங்கை அரசின் அங்கமான முப்படைகளும் பொலிஸாரும்தான். அத்தகைய தரப்பே, இன ரீதியில் நடந்த யுத்தக் குற்றத்தை விசாரிப்பது என்பது குற்றமிழைத்த தரப்பை நீதிபதியாக்கும் வேலைதான்.**

# ஒற்றையாட்சிக் குணாம்சங்களையே கொண்டுள்ளது புதிய அரசமைப்பு

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி சுட்டிக்காட்டு



தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அனைத்தையும் புதிய அரமைப்பு பூரணமாக ஏற்றுக்கொள்ளுமேயானால் நாம் நிச்சயம் அதை ஏற்றுக்கொள்வோம். ஆனாலும் ஒற்றையாட்சியா? சமஷ்டியா? என்ற வாதச்சண்டைக்குள் தீர்வு முயற்சிகள் முடங்கிப்போய் விட நாம் அனுமதிக்க முடியாது. தீர்வின் பெயர் எமக்குப் பிரதானம் அல்ல என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற அரசமைப்பு வரைவு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் அதிகாரங்களே எமது மக்களின் அபிலாஷைகள். மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டு. பகிரப்பட்ட அதிகாரங்கள்நிலைபேறானவையாகவும் மீளப்பறிக்கப்பட முடியாதவையாகவும் இருத்தல் வேண்டும். இறைமையுள்ள மாகாணங்களை கொண்ட இறைமையுள்ள நாடாக இருத்தல் வேண்டும். மதச்சார்பற்ற, இரு மொழிக்கொள்கையுள்ள நாடாகவும் இருத்தல் வேண்டும்.

இதேவேளை, தமிழ் பேசும் மக்களுக்கு விசேட அதிகாரங்களைகொண்ட அரசியல் ஏற்பாடு உள்ளடக்கப்படவேண்டும். இவைமட்டும் இருந்தால் போதும். இத்தகைய தெரிவுக்கு எந்தப் பெயரை சூட்டினாலும் நாம் ஏற்றுக்கொள்வோம்.

ஒற்றையாட்சி என்றால் தமிழ் மக்களின் பார்வையில் சிங்களப் பிசாசு! சமஷ்டி என்றால் சிங்கள மக்களின் பார்வையில் தமிழ்ப் பிசாசு!! இரண்டுமே பிசாசுகள் அல்ல என்பதை தெளிவூட்ட விரும்புகிறேன்.

பெடரல் பார்ட்டி என்று சிங்கள மக்கள் மத்தியில் சமஷ்டிக் கட்சியாகவும், தமிழரசுக் கட்சி என்று தமிழர்கள் மத்தியில் தனியரசு கட்சியாகவும் இரு தரப்பையும் ஏமாற்றியது போல் இரட்டை வேடம் இனியும் வேண்டாம்.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு முகமும், சிங்கள மக்களுக்கு இன்னொரு முகமும் காட்டும் மாய வித்தைகளை அரசியல் தீர்வு விடயத்திலும் காட்டுவதை அனுமதிக்க முடியாது. அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், அதனை மீளமைப்பதற்குமான அதிகாரங்கள் மத்திய அரசுக்கே உண்டு என இங்கு கொண்டுவரப்படும் வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாகாணங்களுக்கான அதிகாரங்களை மத்திய அரசினால் குறைக்கவும் முடியும், பறிக்கவும் முடியும், மாகாண சபை முறைமையை அகற்றிவிடவும் முடியும் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, இது ஒருமித்த நாட்டிற்குரிய அதிகாரங்கள் அல்ல என்றும் மாறாக, ஒற்றையாட்சிக்குரிய பண்புகளையே கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாலை, வெள்ளிக்கிண்ணத்தில் குடித்தாலும், பொற்கிண்ணத்தில் குடித்தாலும், பால் வெள்ளியாகவோ, பொன்னாகவோ மாறி விடப்போவதில்லை. பால் என்றும் பால்தான். அதே போல் ஒற்றையாட்சிக்குரிய அதிகாரங்களை கொண்டிருக்கும் அரசமைப்பிற்கு ஒருமித்த நாடு என்று பெயர் சூட்டி விட்டால் ஒற்றையாட்சி சமஷ்டியாக மாறி விடாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தவரைவில் என்னால் காணக்கூடியதாகவுள்ள சில விடயங்கள் தொடர்பில் சில யோசனைகளை கால அவகாசம் கருதி, சுருக்கமாக முன் வைக்க விரும்புகின்றேன்–என்று தெரிவித்து அவற்றை விவரித்தார் அவர். (ஐ)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 12

திருமறைக் கலாமன்றம் ஆண்டுதோறும் நடத்தும் ‘பொங்கல் விழா’ சிலகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மாலை கலைநிகழ்ச்சிகளுடன் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைஞான சுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனமும், திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் கூத்துபண் இசையும் இடம் பெறும். தொடர்ந்து மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் ‘நேற்றைத் துயரங்கள் நீறாகபொங்குது பால்’ என்னும் பொருளில் கவியரங்கு இடம்பெறும்.

இதில் கவிஞர்களானத.ஜெயசீலன், கு.றஜீபன், ம.ஜொணி, வ.வடிவழகையன் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

தொடர்ந்து நிறைவு நிகழ்வாக இளவாலைத் திருமறைக் கலாமன்றம் வழங்கும் சோழன் மகன் தென்மோடி நாட்டுக் கூத்து இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# வவுனியா திரையரங்கில் மோதல்

வவுனியா, ஜன. 12

வவுனியா திரையரங்கு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அடிதடியில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

அஜித் நடிப்பில் வெளிவந்துள்ள விஸ்வாசம் திரைப்படத்தை காண்பதற்கான நுழைவுசீட்டைக் கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்ற இளைஞர்களுக்கிடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அது வாக்குவாதமாக உருவெடுத்து அடிதடியாக மாறியது.

சம்பவத்தில் சினிமாப் பாணியில் மதுப் போத்தல்கள், தலைக்கவசங்களால் குழுக்களாகப் பிரிந்து இளைஞர்கள் தாக்கிக் கொண்டனர். இதனால் கண்டி வீதியின் போக்குவரத்து சிறிது நேரம் பாதிப்படைந்திருந்தது. சம்பவத்தில் பலர் காயமடைந்தபோதும் ஒருவரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அவசர இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியபோதும் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே – 30 நிமிடங்களுக்கு பின்னரே – பொலிஸார் அந்தப் பகுதிக்கு வந்து வாகனத்திற்குள்ளேயே இருந்துவிட்டுத் திரும்பிச் சென்றனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## நாளை

**13.01.2019**
**ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம் : உத்திரட்டாதி கா. 8.07
திதி : ஸப்தமி மு.இ 8.01 வரை
**சுபநேரம் : 9.33 - 11.03 வரை**
**இராகுகாலம் : 5.03 - 6.33 வரை**

# கிழக்கு மாகாணத்தில் நேற்று கடையடைப்பு





## புதிய ஆளுநராக ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்பட்டமையை எதிர்த்து

மட்டக்களப்பு, ஜன. 12

கிழக்கு மாகாண ஆளுநர் நியமனத்துக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் அழைப்பில் நேற்றுக் காலை முதல் இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

'ஜனாதிபதியே பொருத்தமற்ற ஹிஸ்புல்லாவை நீக்கி கிழக்கு மக்களை பாதுகாத்திடு' எனும் தலைப்பில் இந்த ஹர்த்தாலில் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அது தொடர்பான சுவரொட்டிகளும் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் முற்றாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. எனினும் முஸ்லிம் பிரதேசங்களில் வழமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காமையால் கல்வி நடவடிக்கைகள் முற்றாகச் செயலிழந்தமையுடன், அரச நிறுவனங்கள் மக்கள் வரவின்மையினால் வெறிச்சோடி காணப்பட்டன.

தனியார் மற்றும் அரச போக்குவரத்துச் சேவைகள் வழமைபோன்று நடைபெற்று வரும் நிலையிலும், மக்கள் வரவு குறைவாகவே காணப்பட்டதாகக் கூறப்பட்டது. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் ஹர்த்தாலினால் அன்றாடச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன. (ஐ)

## "திருவாசகமணி" விருது வழங்கி கௌரவிப்பு



யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத நடராசர் சந்நிதானத்தில் அண்மையில் நடத்தப்பட்ட திருவாச முற்றோதல் நிகழ்வில் சமய சமூக சேவையாளரும் இசைக் கலைஞருமான கலாபூஷணம் கந்தப்பு லோகேஸ்வரன் நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளினால் "திருவாசக மணி" என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ

## மைத்திரி பிலிப்பைன்ஸ் பயணம்

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் பிலிப்பைன்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸின் வெளிவிவகார அமைச்சு இதனை உறுதி செய்துள்ளது.

அந் நாட்டின் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடட்ரேவியின் அழைப்பின் பேரில், எதிர்வரும் 15 ஆம் திகதி அவர் இந்த விஜயத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

இந்த மாதம் 19ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 16ஆம் திகதி அந்த நாட்டின் ஜனாதிபதியை சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இராதாகிருஷ்ணனுக்கு நேற்று அமைச்சுப் பதவி



கொழும்பு, ஜன. 12

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக இருவரும், பிரதியமைச்சர் ஒருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

அதன்படி விசேட பிராந்தியங்கள் வேலைத்திட்டங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக ரவீந்திர சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை பிரதி அமைச்சராக அப்துல்லாஹ் மஹ்ரூப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் தயா கமகேக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சமூக வலுவூட்டல் அமைச்சராக தயா கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

# புலிகளைக் குறைகூறும் அருகதை எனக்கில்லை

## ஒஸ்லோ பிரதி மேயர் ஹம்சாயினி சொல்கிறார்

கொழும்பு, ஜன. 12

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் குறை கூறுவதற்கான தேவையோ அல்லது அதற்கான அருகதையோ தனக்கில்லை என, நோர்வே தலைநகர் ஒஸ்லோவின் பிரதி மேயர் ஹம்சாயினி குணரத்னம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் பெண்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கவில்லை என்ற ஒஸ்லோ பிரதி மேயரின் கருத்து கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்திருந்தது.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு அவர் பதில் வழங்குகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எந்தவொரு இடத்திலும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதற்காகக் குரல் கொடுப்பவர் என்ற வகையில் ஓர் உதாரணமாகவே விடுதலை புலிகளைச் சுட்டிக்காட்டினேன். அவர்களைக் குறை கூற வேண்டிய அவசியம் இல்லை.

தமிழ் சமூகம் ஒரு குடும்பம். எனவே தங்களுக்குள் பிழைகளை சுட்டிக்காட்டுவது ஒருவரை குறை கூறுவதற்காக அன்றி, தம்மை முன்னேற்றிக் கொள்வதற்காகவே – என்றார். (ஐ)



# மைத்திரி - மஹிந்த இணைந்து கூட்டணி விரைவில் உதயம்!

## கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, ஜன. 12

எதிர்வரும் தேர்தலுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை உள்ளடக்கிய பெரும் கூட்டணியொன்று உதயமாகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் இந்தக் கூட்டணிக்கு ஆதரவு வழங்கியுள்ளன. ஏனைய சில கட்சிகளும் இணைவதற்குத் தயாராக உள்ளன.

ஆகையால் நடைபெறவுள்ள தேர்தலில் அதிக வாக்குகளை நாங்கள் நிச்சயம் பெறுவது உறுதி.

அரசால் மக்களின் வாக்குகளை பெறமுடியுமென்றால் விரைவாக தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுகின்றோம் – என்றார். (ஐ)

# இந்திய விமானப்படையிடம் 30 ஆயிரம் கோடியை திருடி அனில் அம்பானியிடம் கொடுத்துள்ளார் பிரதமர் மோடி

## ராகுல் காந்தி பரபரப்பு குற்றச்சாட்டு

புதுடில்லி,ஜன.12

பிரதமர் மோடி இந்திய விமானப் படையிடம் இருந்து 30ஆயிரம் கோடி ரூபாவை திருடி அதை அனில் அம்பானியிடம் கொடுத்துள்ளார் என ராகுல்காந்தி குற்றஞ்சாட்டி உள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை சிபிஐ இயக்குநர் பதவியில் இருந்து அலோக் வர்மா நீக்கப்பட்டார். பிரதமர் மோடி தலைமையிலான விஜிலென்ஸ் அமைப்பின் தேர்வு குழு கூடி இந்த முடிவை எடுத்துள்ளது.

பதவி ஏற்று இரண்டாவது நாளே அலோக் வர்மா நீக்கப்பட்டுள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு பல தரப்பில் இருந்தும் கண்டனக் குரல்கள் எழுந்து வருகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தற்போது டுவிட் செய்துள்ளார். மத்திய அரசை கண்டித்தும் பிரதமர் மோடி ஏன் இப்படி செய்தார் என்றும் கண்டனம் தெரிவித்து ராகுல் காந்தி டுவிட் செய்துள்ளார்.

அதில், பிரதமர் மோடியின் மனதை தற்போது பயம் ஆட்கொண்டு இருக்கிறது. அவரால் தூங்க முடியவில்லை. அவர் இந்திய விமானப் படையிடம் இருந்து 30ஆயிரம் கோடி ரூபாவை திருடிவிட்டார். அதை அனில் அம்பானியிடம் கொடுத்துள்ளார்.

இரண்டு முறை தொடர்ச்சியாக அலோக் வர்மாவை சிபிஐ இயக்குநர் பதவியில் இருந்து நீக்கியதே பிரதமர் மோடி தனது பொய்களிடம் சிக்கிக் கொண்டார் என்பதை தெளிவாக காட்டுகிறது, என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



# பீகாரில் காதலனுடன் ஓடிய மகளை கௌரவ கொலை செய்த பெற்றோர்

கயா,ஜன.12

பீகார் மாநிலத்தில் 16 வயது மகளை அவரது பெற்றோர் கௌரவ கொலை செய்துள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம் கயா நகரில் அஞ்சனா (வயது16) என்ற சிறுமியே கௌரவ கொலை செய்யப்பட்டுள்ளார். டிசம்பர் 28 ஆம் திகதி காணாமல் போயுள்ளார் அஞ்சனா. ஆனால், அவரது தந்தை ஜனவரி 6 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். இந்நிலையில், அஞ்சனாவின் உடல் சிதைந்த நிலையில், அவரது வீட்டுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மார்பகம் அறுக்கப்பட்டும், அசிட் ஊற்றியும் சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் அஞ்சனா. இது தொடர்பான புகைப்படங்கள் வைரலாகின. இதற்கிடையில், 28 ஆம் திகதி தனது தந்தை மற்றும் அவரது உறவினருடன் அஞ்சனா கடைசியில் வெளியில் சென்றுள்ளது தெரியவந்துள்ளது.

தனது மகள் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுவிட்டார் எனத் தந்தை புகார் அளித்திருந்தாலும், காதலனுடன் அஞ்சனா ஓடியதால் இந்த கொலை நடந்துள்ளது. இது தொடர்பாக தந்தை மற்றும் தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். வட மாநிலங்களில் சாதி மீறிய காதல் திருமணங்களால் ஆணவக்கொலைகள் அரங்கேறுவது தொடர்கதையாக உள்ளது.



# அலோக் வர்மாவின் பதவி பறிப்பு மத்திய அரசு அதிரடி நடவடிக்கை

புதுடில்லி,ஜன.12

புதுடில்லியில் நடைபெற்ற நியமனக்குழு கூட்டத்தில், சிபிஐ இயக்குநர் பதவியில் இருந்து அலோக் வர்மாவை நீக்க முடிவு செய்யப்பட்டது.

ஊழல்குற்றச்சாட்டுகள் தொடர்பில் மத்திய அரசு கட்டாய விடுப்பில் செல்ல உத்தரவிட்டது செல்லாது, மீண்டும் அலோக் வர்மாவை பணியில் தொடர அனுமதிக்க வேண்டும், ஊழல் விசாரணை முடியும் வரை கொள்கை முடிவு எதுவும் அலோக் வர்மா எடுக்கக்கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் –

அலோக் வர்மா டெல்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்துக்கு வந்து மீண்டும் சி.பி.ஐ. இயக்குநராக கடந்தபுதன்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், சி.பி.ஐ. இயக்குநர் அலோக் வர்மா மீதான ஊழல் புகாரில் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய ஆலோசனை டில்லியில் பிரதமர் இல்லத்தில் நியமனக்குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது

கூட்டத்தின் முடிவில், சிபிஐ இயக்குநர் பதவியில் இருந்து அலோக் வர்மாவை நீக்க முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை சிபிஐ இயக்குநர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து, தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றவை என்று அலோக் வர்மா தெரிவித்துள்ளார்.



# பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை - ஸ்டாலின்

சென்னை,ஜன.12

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பா.ஜ.கவுடன் ஒருபோதும் கூட்டணி வைக்க மாட்டோம் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை வாஜ்பாய் காட்டிய வழியில் பா.ஜ.க. கூட்டணி அமைக்கும் என்றும், பழைய நண்பர்களையும் இணைத்துக்கொள்ள தயாராக இருக்கிறாா் என்றும் மோடி கூறினார். எனவே, இதற்கு முன்பு பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்திருந்த கட்சிகளுக்கு மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நிராகரித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பா.ஜ.கவுடன் ஒருபோதும் திமுக கூட்டணி வைக்காது என அறிவித்துள்ளார். பிரதமர் மோடி, வாஜ்பாயும் அல்ல என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

1999இல் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

# முன் அனுமதியின்றி சோதனை நடத்த சி.பி.ஐக்கு சத்தீஸ்கர் மாநிலமும் தடை

ஆந்திரா, மேற்குவங்கத்தை தொடர்ந்து சத்தீஷ்கரும், முன் அனுமதியின்றி விசாரணை நடத்த சிபிஐக்கு தடை விதித்துள்ளது.

வழக்கு விசாரணை தொடர்பாக, மாநிலத்தில், மத்திய அரசு அலுவலகங்கள் தவிர, வேறு இடங்களில் சோதனை அல்லது விசாரணை நடத்த வேண்டுமென்றால், சி.பி.ஐ.அதிகாரிகள், மாநில அரசிடம் முன்கூட்டியே தகவல் தெரிவித்து, அரசின் ஒப்புதல் பெற வேண்டும் எனவும் இதற்காக சிபிஐக்கு அளித்திருந்த ஒப்புதலை இரத்து செய்தும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அண்மையில் அறிவித்து இருந்தார். இதைத் தொடர்ந்து, மேற்கு வங்காள மாநில முதல்வர் மம்தா பானர்ஜியும், சிபிஐ முன் அனுமதியின்றி சோதனை நடத்த தடை விதித்து இருந்தார்.

இந்நிலையில், சத்தீஷ்கர் மாநில அரசும் இதே நடவடிக்கையை எடுத்துள்ளது. இது தொடர்பாக சத்தீஷ்கர் மாநில அரசு, மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில், புதிய விவகாரங்களில் சிபிஐ தனது அதிகார வரம்பை சத்தீஷ்கர் மாநிலத்திற்குள் முன் அனுமதியின்றி பயன்படுத்தக்கூடாது என மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும். இவ்விவகாரம் தொடர்பாக மத்திய அரசுக்கு 2001 ஆம் ஆண்டு அளித்திருந்த ஒப்புதலை மாநில உள்துறை திரும்ப பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

# 'ஜெ' சிகிச்சை ஆவணங்கள் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் மூலம் ஆய்வு

## அப்பலோ சசிகலா தரப்புக்கு அதிர்ச்சி

சென்னை,ஜன.12

ஜெயலலிதா சிகிச்சை ஆவணங்களை சிறப்பு மருத்துவ நிபுணர்கள் குழு மூலம் விசாரணை ஆணையம் இரகசியமாக ஆய்வு செய்துள்ளது. இது அப்பலோ, சசிகலா தரப்புக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஜெயலலிதா மரணம் குறித்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த அப்பலோ மருத்துவர்கள் பலர் ஆணையத்தில் ஆஜராகி வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

ஜெயலலிதா சிகிச்சை தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்யவும், அப்பலோ மருத்துவர்களின் வாக்குமூலத்தை சரிபார்க்கவும் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் குழுவை ஏற்படுத்திக்கொள்ள ஆணையத்துக்கு தமிழக அரசு அனுமதி அளித்து இருந்தது.

மருத்துவ நிபுணர்கள் குழு ஏற்படுத்தப்படாததால் அப்பலோ மருத்துவர்களின் வாக்கு மூலம் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு பதிவு செய்யப்படுவதாகவும், எனவே, அரசு ஏற்கனவே அனுமதி அளித்தபடி ஆணையத்துக்கென தனியாக சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவை ஏற்படுத்த வேண்டும் என்றும் அப்பலோ நிர்வாகம் நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தில் மனு தாக்கல் செய்தது.



இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதி ஆறுமுகசாமி முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தன. அப்போது ஆணையத்தின் சட்டத்தரணி பதில் மனு தாக்கல் செய்தார்.

அதில், 'விசாரணை ஆணையத்துக்கென தனியாக சிறப்பு மருத்துவர்கள் குழு ஏற்படுத்தப்பட்டு அந்தக்குழு ஜெயலலிதா சிகிச்சை தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்துள்ளது. அந்தக்குழுவில், சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் பணியாற்றி வரும் இதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் ஆர்.நந்தகுமார், எம்.சிவராமன், பயோ கெமிஸ்ட் டிஸ்ட் மரகதம், இதய நோய் தடுப்பு சிறப்பு நிபுணர் எம்.நந்தகுமரன், கதிரியக்க மருத்துவர் ரவி ஆகியோர் இடம்பெற்று இருந்தனர். என்ன நோக்கத்துக்காக அவர்களது சேவை தேவைப்பட்டதோ அதற்காக அவர்களை பயன்படுத்திகொண்டோம்' என்று கூறப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் குழுவை அமைத்து ஜெயலலிதா சிகிச்சை ஆவணங்களை ஆணையம் இரகசியமாக ஆய்வு செய்துள்ளது. அப்பலோ மருத்துவமனை நிர்வாகம், சசிகலா தரப்புக்கு தெரியாது. இதனால், ஆணையத்தின் பதில் மனு அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சூடானில் ரொட்டி விலை அதிகரிப்பு: அரசுக்கு எதிராகப் போராட்டங்கள்

## இதுவரை 22 பேரின் உயிர் பறிபோனது



கர்த்தூம்,ஜன.12

சூடானில் ரொட்டி விலை அதிகரித்ததை அடுத்து அரசுக்கு எதிராக தொடரும் போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறை மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகளால் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடான் நாட்டில் ரொட்டி உற்பத்திக்கான அரசு மானியங்கள் நிறுத்தப்பட்டமையால், ரொட்டி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இது பொதுமக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. ரொட்டி விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினருடன் இணைந்து பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டக்காரர்கள் பல்வேறு பகுதிகளில் வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், கடைகளை சூறையாடி அங்குள்ள பொருள்களை போராட்டக்காரர்கள் கொள்ளையடித்துச் செல்வதும் அதிகரித்தது. போராட்டக்காரர்களை ஒடுக்க கலவர தடுப்பு பிரிவு பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்படுகிறது. கடந்த மாதம் நடந்த போராட்டங்களில் 19 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமையன்று ஜனாதிபதி பஷீருக்கு ஆதரவாக தலைநகர் கர்த்தூமில் போட்டி பேரணி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அரசுக்கு எதிராகவும் தனியாக போராட்டம் நடைபெற்றது. இதனால் தலைநகரில் கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஓம்டர்மான் பகுதியில் திரண்ட நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள், அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். 'ஜனாதிபதி ரஷீத் பதவி விலக வேண்டும், சுதந்திரம், அமைதி மற்றும் நீதி வேண்டும்' என கோஷமிட்டபடி பேரணியாக சென்றனர். அவர்களை பொலிஸார் சுற்றி வளைத்து தடுத்து நிறுத்தினர். பின்னர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி அவர்களை விரட்டியடித்தனர்.

இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். சிலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அரசுக்கு எதிரான போராட்டம் மற்றும் வன்முறைகளால் இதுவரை 22 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். ஆனால் 40 பேர் வரை இறந்திருக்கலாம் என நியூயோர்க்கைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

25 ஆண்டுகால இல்லற வாழ்வின் பின்னர்

## உலக பெரும் பணக்காரர் மனைவியைப் பிரிந்தார்!

உலக பெரும் பணக்காரர் அமேசான் உரிமையாளர் ஜெப் பெசோஸ் மற்றும் மெக்கென்சி இருவரும் விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர்.

உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் பல ஆண்டுகளாக முதல் இடத்தில் இருந்த பில்கேட்சை பின்னுக்கு தள்ளி சாதனை படைத்தவர் அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெப் பெசோஸ் (வயது 54). இவரது தற்போதைய சொத்து மதிப்பு 137 பில்லியன் டொலர் ஆகும்.



இவருடையமனைவி மெக்கென்சி (48). இவர் நாவலாசிரியர் ஆவார். இவர்களுக்கு திருமணமாகி 25 ஆண்டுகள் ஆகிறது. 3 ஆண் குழந்தைகள் உள்ளனர். மேலும் ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்து வருகிறார்கள். இந்த நிலையில், ஜெப் பெசோஸ் மற்றும் மெக் கென்சி இருவரும் விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர். இந்த தகவலை அவர்கள் இருவரும் டுவிட்டரில் தெரிவித்தனர்.

நீண்ட கால காதல் வாழ்க்கைக்குப் பிறகு, சோதனை முறையில் பிரிந்து வாழ்ந்த பிறகு, நாங்கள் விவாகரத்து செய்துகொண்டு, நண்பர்களாக இருக்க முடிவு செய்துள்ளோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள், தனித்தனி வாழ்க்கையை தேர்ந்தெடுத்தாலும், நாங்கள் குடும்பமாக இருப்போம். எதிர்காலத்தில் பெற்றோர்களாக, நண்பர்களாக, பணித் திட்டங்களில் கூட்டாளிகளாக சேர்ந்து செயல்படுவோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## 72 மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்ட இளம் பெண்ணின் இதயத்துடிப்பு!

பீஜிங்,ஜன.12

சீனாவில் 26 வயது யுவதிக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக அவரின் இதயத்துடிப்பு 72 மணிநேரம் நிறுத்திவைக்கப்பட்டு மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

சீனாவின் ப்யூஜியான் மாகாணத்தில் 26 வயது யுவதி ஒருவர் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தமையை அடுத்து அவருக்கு எக்மோ சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் 2 மணிநேரம் அவர் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனையடுத்து அவருக்கு பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டன.

இறுதியில் இதயத்தில் உள்ள குழாய் ஒன்றினை துண்டித்து, பின் மீண்டும் ஒட்ட வைக்க மருத்துவர்கள் திட்டமிட்டனர். இதற்காக கிட்டத்தட்ட 72 மணி நேரம் அந்தப் பெண்ணின் இதயத்துடிப்பை நிறுத்தி வைத்து அறுவைச் சிகிச்சை செய்தனர். தற்போது அந்தப் பெண் நலமாக இருக்கிறார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


சீன மருத்துவர்கள் சாதனை

## வடகொரியா மீதான பொருளாதார தடைகளை விலக்க வேண்டும் என்கிறது தென்கொரியா

சியோல், ஜன.12

வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகள் விலக்கி கொள்ளப்படவேண்டுமென தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவுடன் மீண்டும் பொருளாதார ஒத்துழைப்பை தொடங்க அந்நாடு மீதான பொருளாதார தடையில் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று தென்கொரியா தெரிவித்துள்ளது. தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் இது தொடர்பில் தெரிவிக்கையில் -



அணு ஆயுதங்களைக் கைவிடுவதற்கான நடவடிக்கைகளை வட கொரியா இன்னும் உறுதியாக மேற்கொள்ள வேண்டும். அப்போது தான், அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விலக்கிக் கொள்ளும்.

வட கொரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டால்தான், அந்த நாட்டுடன் தென் கொரியா வர்த்தக உறவை மேம்படுத்திக் கொள்ள முடியும். எனவே, அந்தப் பொருளாதாரத் தடைகளை விலக்குவது குறித்து அமெரிக்காவிடம் பேசுவோம் என தெரிவித்தார்.

## டாவோஸ் பயணத்தை இரத்துச் செய்தார் ட்ரம்ப் அமெரிக்காவில் தொடரும் அரசுத் துறை முடக்கம்

வொஷிங்டன்,ஜன.12

அமெரிக்காவில் அரசுத் துறைகள் முடக்கம் நீடிப்பதால் சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறவுள்ள உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவும் வெளிநாட்டவரை தடுக்க மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்ட ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முடிவு செய்துள்ளார். அதற்காக 5.7 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கும்படி அமெரிக்க நாடாளுமன்றத்திடம் அனுமதி கேட்டார்.



அதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து அனுமதி வழங்கவில்லை. அதனால் ஆண்டுபட்ஜெட் நாடாளுமன்றில் நிறைவேறவில்லை. இதனால் கடந்த 20 நாள்களாக பாதி அரசு அலுவலகங்கள் செயல்படாமல் முடங்கிக் கிடக்கின்றன.

அண்மையில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்கள் ஆலோசனை கூட்டத்துக்கு டிரம்ப் ஏற்பாடு செய்தார். வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமுக முடிவு எட்டப்படவில்லை. தனது நிபந்தனைகள் ஏற்கப்படாதமையால் பாதியில் வெளியேறினார் டிரம்ப்.

அரசுத் துறைகள் முடக்கம் நீடிக்கும் நிலையில், டாவோஸ் சுற்றுப்பயணத்தை டிரம்ப் இரத்து செய்துள்ளார். உலக பொருளாதார மன்ற மாநாட்டுக்காக டாவோஸ் செல்லும் மிகவும் முக்கியமான பயணத்தை இரத்து செய்திருப்பதாக டிரம்ப் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். உலக பொருளாதார மாநாடு சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் வரும் 21 ஆம் திகதி தொடங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தெற்கு எல்லை மாகாணமான டெக்ஸாஸுக்கு டிரம்ப் பயணம் மேற்கொண்டார். அப்போது செய்தியாளர்கள் டிரம்பிடம், அவசர நிலை அறிவிப்பை நெருங்குகிறீர்களா? என கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த டிரம்ப், இதை (அவசர நிலை) வேகமாக செய்ய வேண்டும் என நான் நினைக்கிறேன். ஏனெனில் இதற்கு எந்த செலவினமும் ஆகாது – என்றார்.

சீனா ஒரு பெரிய வெடிகுண்டு ஒன்றை உருவாக்கி உள்ளதாக அறிக்கை வெளியாகி உள்ளது. சீனாவின் இந்த 'மதர் ஒவ் ஓல் பொம்ப்ஸ்' அமெரிக்காவின் வெடிகுண்டுகளுக்கான சரியான பதிலாக இருக்கும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

நல்ல செய்தி என்னவென்றால், அறிக்கை கூறும் வெடி குண்டு ஆனது மிகவும் பெரியது தான் ஆனால் அது அணுவாயுதம் கிடையாது. அதாவது மிகவும் சக்திவாய்ந்த அணு அல்லாத ஆயுதம் என்று பொருள். இந்த அறிக்கை நாட்டின் உத்தியோகபூர்வ ஊடகத்தின் வழியாக வெளியாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**போலியான தகவலா? அல்லது அதிகாரபூர்வமான தகவலா?**

சீனாவின் மிகப்பெரிய பாதுகாப்புத் துறை நிறுவனமான நோரின்கோ (NORINCO) ஆனது, முதல் தடவையாக வான்வழி வெடிகுண்டு ஒன்றை காட்சிப்படுத்தி உள்ளதாகவும், அது தான் நாட்டின் மிகப்பெரிய அணு சக்தி இல்லாத குண்டு என்றும், அரசு நடத்தும் க்ளோபல் டைம்ஸ் அறிக்கை கூறி உள்ளது.

**இது ஏன் குண்டுகளின் தாய் என்று அழைக்கப்படுகிறது?**

அணு சக்தியை கொண்டிருக்காத இந்த குண்டு, குண்டுகளின் தாய் என்று அழைக்கப்படுவதற்கு ஒரு காரணம் உள்ளது. அணு குண்டு அளவிற்கு இல்லை என்றாலும் கூட இந்தக் குண்டு ஆனது பெரும் பேரழிவை ஏற்படுத்தும் திறனைக் கொண்டுள்ளதாம். அதனால் தான் சீனா இதை அனைத்து வெடிகுண்டுகளின் தாய் என்று தனது அறிக்கையில் கூறி உள்ளதாம்.



# உலகை உலுக்கும் சீனா உருவாக்கியுள்ள இராட்சத தாய்க்குண்டு!

இருக்கும். இந்த தகவலை பெய்ஜிங்கை சேர்ந்த இராணுவ ஆய்வாளர் வேய் டாங்சூ குளோபல் டைம்ஸிடம் உறுதிப்படுத்தி உள்ளார். இந்த மிகப்பெரிய வெடிப்பு ஆனது மிகவும் எளிதான முறையில், முற்றிலும் வலுப்படுத்தப்பட்ட கட்டடங்கள், கோட்டைகள் மற்றும் பாதுகாப்பு முகாம்களைக் கூட தரை மட்டம் ஆக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சீனா ஆகிய நாடுகள் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி உள்ளது. அந்த அறிவிப்பிற்கு பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, அதன் 'ககன்யான்' திட்டத்தை அறிவித்தது. இது இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பணியாகும். 16 நிமிடங்களில் என்கிற மதிப்பிடப்பட்ட காலப்பகுதியில் விண்வெளிக்குச் செல்லும் மூன்று விண்வெளி வீரர்கள், அங்கு ஒரு வாரம் தங்கி கழிக்க உள்ளார்கள்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பியலின் தேசிய சங்கத்தின் மூத்த பொறியியலாளரும், தலைவருமான அனுஜ் சின்ஹா, 'விஞ்ஞானிகள் சந்திப்பு' கூட்டத்தில் பேசியபோது, இந்த பணியின்

டுகிறார். ஏற்கனவே விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பியுள்ள சீனா கூட அதன் சேன்ஜி 4 விண்கலத்தை தான் நிலவின் இருந்த பகுதியில் தரை இறக்கி உள்ளது, மனிதர்களை அல்ல என்கிறார்.

ஒவ்வொரு நாடும் தங்கள் விண்வெளி வீரர்களை விண்வெளிக்குள் அனுப்பி வைப்பதில் முதலிடம் வகிக்க வேண்டும் என்பதையும், அதன் மூலமாக அவர்கள் தங்கள் பங்குகளை பெற முடியும் என்பதை தான் புரிந்து கொள்வதாக கூறிய சின்ஹா, ஒவ்வொரு நாடும் தங்கள் இடைவெளியை ஒரு விண்வெளிப் பொருளில் விட்டுவிட விரும்புகிறது என்றும், உலக நாடுகள் விண்வெளி பயணத்தை ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் மற்றும் திறன் வளர்த்தலாகவும் எடுத்துக் கொள்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

**கண்மூடித்தனமாக நிகழ்த்தப்படும் விண்வெளி வளர்ச்சி**



இந்த உலகம் வாழ தகுதி அற்ற ஒரு இடமாக ,மாறும் காலத்தை மனதிற் வைத்துக்கொண்டு கண்மூடித்தனமாக நிகழ்த்தப்படும் விண்வெளி வளர்ச்சிகளை மட்டுமே சின்ஹா குற்றம் சாட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒட்டுமொத்தமாக அவர் ஒரு பிரதான கேள்வியை எழுப்புகிறார், இயந்திரம் மூலம் நாம் செய்ய விரும்பும் வேலை செய்ய முடியும் என்றால், ஏன் மனிதர்களை விண்



## கலங்கிப் போயுள்ளது அமெரிக்கா!!

சாத்தியக்கூறு குறித்து கேள்விகளை எழுப்பினார்.

**10,000 கோடி ரூபாய் திட்டம்**

அனுஜ் சின்ஹாவின் படி, இந்த திட்டத்திற்கு சுமார் 10,000 கோடி ரூபாய் திட்டம் செலவு செய்யப்பட உள்ளது. அதனால் இது முழுக்க முழுக்க கௌரவம் மற்றும் திறமையை கட்டியெழுப்பும் ஒரு திட்டம் தானே தவிர எந்தவொரு உடனடி நோக்கம், உள்நோக்கம் அல்லது தேவையையும் கொண்டிருக்கவில்லை என்கிறார்.

வெளிக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். ஒருவேளை மனித தலையீடுகளால் மட்டுமே செய்ய கூடிய காரியம் என்றால், ஏழு நாள்கள் வரை விண்வெளி வீரர்களை விண்வெளிக்குள் தங்க வைப்பது நியாயமாக இருக்கும் என்றும் சின்ஹா கூறியுள்ளார்.

**ககன்யான்**

வருகிற 2022 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட உள்ள ககன்யான் திட்டத்தை வைத்து முன்னேற வேண்டும் என்று

**பரிசோதனை நடந்ததா?**

பரிசோதனை நடக்காமலா? நடந்தது. வெடி குண்டுகளை சுமந்து செல்லும் சீனாவின் எச் - 6கே பொமர் மூலம் இந்த குண்டு பரிசோதனை செய்யப்பட்டு உள்ளது. அந்தப் பரிசோதனை வெடிப்பு வீடியோவை சீன நார்த் இண்டஸ்ட்ரீஸ் க்ரூப் கோர்ப்பரேசன் லிமிடெட் (NORINCO) நிறுவனம், அதன் வலைத்தளத்தில் ஒரு விளம்பர வீடியோவாக வெளியிட்டு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு புதிய குண்டின் வெடிப்பு சோதனையையும் மற்றும் அதன் அழிவு சக்தியையும் சீனா வெளிப்படையாக, பொது பார்வைக்கு காட்டுவது இதுதான் முதல் முறை என்று அரசு நடத்தும் சின்ஹுவா நியூஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

**ஆப்கானிஸ்தான் போராளிகளுக்கு எதிரான போரை நடத்தியபோது...**

கடந்த ஆண்டு, ஆப்கானிஸ்தான் போராளிகளுக்கு எதிரான போரை நடத்தியபோது, அமெரிக்க இராணுவம் ஒரு ஜி.பீ.-43 / மேஸிவ் ஆர்ட்டன்ஸ் ஏர் பிளாஸ்ட் (MOAB) வெடிகுண்டை (பொதுவாக அனைத்து குண்டுகளின் தாய் என்று அழைக்கப்படும்) இஸ்லாமிய அரசின் மீது வீசியது குறிப்பிடத்தக்கது. சீனாவும் இந்த குண்டுக்கு அதே புனை பெயரைப் பயன்படுத்திக் கொண்டாலும் கூட, இதை பல டன் எடையுள்ளதாக கூறப்படுகிறது. அதே சமயம் இது அமெரிக்க ஆயுதங்களை காட்டிலும் சிறிதாக மற்றும் இலகுவாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

**சுமார் ஐந்து முதல் ஆறு மீற்றர் நீளம்**

வெளியான வீடியோவையும், மற்றும் குண்டு வெடிப்பின் வீச்சை வைத்து ஆராயும்போது, இந்தக் குண்டு சுமார் ஐந்து முதல் ஆறு மீற்றர் நீளமுள்ளதாக

**அமெரிக்காவின் ஐயம்**

ஹெலிகொப்டர்களில் செல்லும் துருப்புகளுக்கு ஒரு தரையிறங்கும் மண்டலத்தை உருவாக்கவும் இதை பயன்படுத்தலாம் என்றும், இந்த குண்டு அமெரிக்காவின் எச் - 6கே குண்டை விட சிறியது என்றும் இலகுவானது என்றும் வேய் கூறியுள்ளார். ஒரு குண்டு வேகமாக பறந்து செல்லக்கூடியதாகவும், ஒரு போக்குவரத்து விமானத்தை விட இலக்கை மிகவும் துல்லியமாக அடைய கூடியதாகவும் இருக்க வேண்டும். அந்த திறன்களை இந்த குண்டு பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை, இனி ஐயம் கொள்ள வேண்டியது அமெரிக்கா தான்.

**ரஷ்யா**

இதற்கிடையில் அமெரிக்காவின் மதர் ஒவ் பொம்ப்ஸ் வெடிகுண்டுக்கு பதில் அளிக்கும் வண்ணம், ரஷ்யா அனைத்து குண்டுகளின் அப்பா எனும் குண்டை உருவாக்கி வைத்து இருப்பதும், அது ஒரு பெரிய மற்றும் தெர்மோபாரிக் வெடிகுண்டு ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சீனாவின் புதிய குண்டு ஒரு தெர்மோபாரிக் ஆயுதம் இல்லை என்று ஒரு நார்னிகோ பிரதிநிதி தெளிவுபடுத்தி உள்ளார்.

**மனித உயிர்களை பணயம் வைக்கும் இஸ்ரோவின் ககன்யான் திட்டம்; கிழித்து தொங்கவிட்ட சின்ஹா!**

பிரதமர் நரேந்திர மோடி தனது ஐந்தாவது சுதந்திர தின உரையில் இந்திய மூவர்ண கொடியை விண்வெளிக்கு எடுத்து செல்லும் திட்டம் ஒன்றை அறிவித்தார். அந்தத் திட்டமானது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய நான்காவது நாடு என்கிற பெருமையை இந்தியாவிற்கு வழங்கும் என்றும் அறிவித்தார். ஆம் இதற்கு முன் அமெரிக்கா, ரஷ்யா மற்றும்



**மனிதர்களை அனுப்பவேண்டிய தேவை இல்லை**

இயந்திரம் மூலம் எளிதில் செய்யக்கூடிய வேலைகளுக்கும், இடத்திற்கும் மனிதர்களை அனுப்பவேண்டிய தேவை இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளார். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்ப வேண்டிய உடனடி தேவை இல்லை, மனிதர்களை அனுப்பி தான் ஆராய வேண்டும் என்கிற உள்நோக்கம் இல்லை, முக்கியமாக இது நிச்சயமாக வரையறுக்கப்பட்ட ஒரு நோக்கம் இல்லை, இந்த நிலைப்பாட்டில் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதன் மூலம் மனித உயிர்களை ஆபத்திற்குள்ளாக்குவது தான் மிச்சம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த இடத்தில் சீனாவின் சமீபத்திய நிலவு பயணத்தையும் சின்ஹா குறிப்பி

அரசாங்கத்தின் முடிவு செய்து உள்ளது, தேவைப்படும் பட்சத்தில் இந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சின்ஹா ஒரு வினவலுக்கு பதிலளித்தார்.

**2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 01**

இத்தகைய திட்டங்கள் சம்பந்தப்பட்ட அபாயங்களை எடுத்துக்கூறும் முனைப்பின் கீழ், கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதி நிகழ்ந்த ஸ்பேஸ் ட்டில் கொலம்பியாவின் விபத்தையும், கல்பனா காலப்பன சாவ்லாவின் மரணத்தையும் சின்ஹா முன்வைத்தார். நம் கையில் கால இயந்திரம் இல்லை என்பதால், வெறுமனே திறனை வளர்ப்பதற்கும், கௌரவத்திற்காகவும் மனித உயிர்களோடு விளையாட வேண்டாம் என்று அவர் தனது உரையை முடிவு செய்தார். *

# கிழக்கு ஆளுநர் நியமனத்தை இன ரீதியாக பார்க்காதீர்கள்!

## ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை



திருகோணமலை, ஜன. 12

ஆளுநர்நியமனத்தை இனரீதியாகப் பார்க்கவேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு மாகாண ஆளுநராக நான் நியமிக்கப்பட்ட பின்னர் சில சகோதரர்கள் இன ரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவித்து இன ரீதியாகப் பார்ப்பதை நான் அவதானிக்கின்றேன். இது தொடர்பிலே ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு போன்ற விடயங்களுக்கு ஒரு சில சகோதரர்கள் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் எனவும் அறிகின்றேன்.

குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் நாம் எல்லோரும் சந்தோசப்படவேண்டும் எங்களது மொழியைப் பேசுகின்ற எங்களோடு சேர்ந்து செயற்படக்கூடிய என்னை நியமித்தமைக்காக நீங்கள் எல்லோரும் பெருமைப்படவேண்டும். குறிப்பாக நான் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ குறிப்பிட்ட பிரதேசத்திற்கோ அல்லது குறிப்பிட்ட மாவட்டத்துக்கோ அல்ல மொத்த கிழக்கு மாகாணத்துக்குமே ஆகும்.

நான் ஆளுநர் பதவியைப் பொறுப்பெடுத்த நாள் முதல் கிழக்கு மாகாணத்து அனைத்து மக்களும் எனது சகோதரர்கள், எனது சகோதரிகள், எனது தாய்மார்கள், தந்தையர்கள், தம்பிமார், தங்கைமார் அண்ணன், தம்பி என்று மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆகவே மாகாணத்தில் வாழுகின்ற அனைத்து மக்களையும் பாதுகாத்து அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது எனது கடமையாகும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இனரீதியான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த நிலையில் மிகவும் நெருக்கமாக வாழவேண்டிய தமிழ், முஸ்லிம் சமூகத்தைச் சில அரசியல் பிற்போக்குச் சக்திகளாலும் வெளிநாட்டு டயஸ் போராக்களாலும் தூண்டப்பட்டு மீண்டும் கிழக்கு ஆளுநர் நியமனத்தை வைத்து குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல்ரீதியாக அனுகூலத்தை அடையும் நிகழ்ச்சி நிரலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இதற்கு உள்ளூர் அரசியல்வாதிகளும் சில வெளிநாட்டுச் சக்திகளும் துணைபோவதாக நினைக்கிறேன்.

கடந்த காலக் கசப்பான அனுபவங்களைக் கொண்ட இரண்டு சமூகங்களாகிய நாங்கள் பொருளாதார ரீதியாகவும் உயிர் இழப்புக்களையும் சந்தித்த சமூகங்கள். ஆகவே மிகவும் அன்புடன் கிழக்கு மாகாண மக்களிடத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில் நான் உங்களிடம் வேண்டிக் கொள்வது அறிமுகம் இல்லாத முகப்புத்தகங்கள், வலைத்தளங்கள், இணையத்தளங்களில் வெளிவருகின்ற செய்திகளைப் பகிர்வதிலும் அதனை ஏனைய மக்களுக்கு அச்சுறுத்துவதன் மூலமாகவும் குழப்பத்தை ஏற்படுத்தாமல் ஒற்றுமையாக இருக்கவேண் டும்.

எதிர்வரும் காலங்களில் மூவின மக்களையும் சரிசமமாகப் பார்த்து என்னால் முடிந்த சேவையை எனது காலப்பகுதியில் செய்வேன் என்பதை உறுதியாகக் குறிப்பிடுவதுடன் எதிர்வரும் நாள்களில் கடை அடைப்புக்களையோ ஆர்ப்பாட்டங்களையோ நடத்தி இனங்களுக்கு எதிராக வன்முறைகளை, குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் யாரும் ஈடுபடவேண்டாம் எனவும் மிகவும் அன்போடு கிழக்கு மாகாண சமூகத்தை வேண்டிக் கொள்கிறேன்.

அத்துடன் சகல இனங்களையும் சேர்ந்த சமயத் தலைவர்கள், சமூக நிறுவனங்கள், அரசியல் தலைமைகள் அனைவரும் இவ் விடயங்களில் சுமூகமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்பதுடன் இந்த மாகாணத்தில் மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு ஏற்றவகையில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறேன்-என்றுள்ளது. (ஜ)

# உழுந்துக்கான வரி அதிகரிப்பு

கொழும்பு, ஜன.12

இறக்குமதி செய்யப்படும் உழுந்துக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் உழுந்துக்கு விதிக்கப்பட்டிருந்த 125 ரூபா வரி 200 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.



உள்ளூர் உழுந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஹெக்டர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் சிரேஷ்ட விவசாய பொருளியல் நிபுணர் துமிந்த பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் உழுந்து அறுவடை ஆரம்பித்துள்ளமையால், சந்தையில் அதற்கான விலை வீழ்ச்சி அடையக்கூடும் என அவர் கூறியுள்ளார். (ஜ)

# நெடுங்கேணியில் சிக்கின போலி நாணயத் தாள்கள்



வவுனியா, ஜன. 12

வவுனியா நெடுங்கேணியில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான போலி தாள்கள் மீட்கப்பட்டுள்ளன என நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு நெடுங்கேணிப் பொலிஸார் இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை சந்தேகத்துக்கு இடமான ஒரு நபரைச் சோதனை செய்தனர். இதன்போது அந்த நபரிடம் இருந்து 5000 ரூபா தாள்கள் 18, 1000 ரூபா தாள்கள் 10 அடங்கலாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ)

# மன்னார்ப் புதைகுழி விடயத்தில் சட்டத்தை நிலைநாட்டவேண்டும்

## டக்ளஸ் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

மன்னார் மனிதப் புதைகுழி விடயத்தில் சட்டம் உரிய முறையில் நிலைநாட்டப்படவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் புதைக்குழி விவகாரம் வெறும் கண்காட்சியாகிவிடாது, உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்



எப்பட வேண்டும்.

அதுமாத்திரமின்றி அங்கு புதைக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் மரணங்கள் ஆராயப்பட்டு, குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் அது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (ஜ)

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை மக்களால் தடுப்பு

முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை உரிமையாளரின் சம்மதத்தோடு அளவிட்டு சுவீகரிக்க இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் அந்த நிலத்தை அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக்களத்தினர் மக்களால் தடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

காணி அளவீட்டுப்பணி இடம்பெறவுள்ளதாக தகவல் வெளியாகியதை அடுத்து அங்கு ஒன்று கூடிய மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் நில அளவீட்டைச் செய்யவிடாது தடுத்து நிறுத்தினர்.

இந்தக் காணி உரிமையாளருக்கு பல ஏக்கர் காணிகள் இருக்கின்றன. இது அவருடைய காணியாக இருந்தாலும் எங்களுடைய உறவுகள் புதைக்கப்பட்ட நிலம். இதனை அளவிட்டு இராணுவத்துக்கு வழங்க இடமளிக்கமாட்டோம். எமது பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் விவசாயம் செய்கின்றனர். இந்த காணியைத் துயிலுமில்லத்துக்காக இராணுவத்திடம் இருந்து மீட்டு வழங்கவேண்டும். இராணுவத்துக்கு இதனை வழங்கமுடியாது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் எதிர்ப்பினால் காணி அளவீட்டுப் பணிகள் நேற்றுத் தற்காலிகமாக கைவிடப்பட்டன. (ஜ)

# பொத்துவிலுக்குத் தனிக் கல்வி வலயம் அமைப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம்

## முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிக்கு பலன்

கொழும்பு, ஜன. 12

பொத்துவில் பிரதேசத்துக்குத் தனியான கல்வி வலயம் அமைப்பதற்கான அமைச்சரவைப்பத்திரம் அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்தார்.

தென்கிழக்கில் காணப்படும் முக்கிய கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற குழு நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசியபோதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

பொத்துவில் பிரதேசத்துக்கு தனியான கல்வி வலயம் அமைப்பதுடன் பொத்துவில் மத்திய கல்லூரி, ஒலுவில் அல்ஹம்ரா மகா வித்தியாலயம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தது.

கோரிக்கைகளை செவிமடுத்த கல்வி அமைச்சர், இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை உடனடியாக தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட்டதுடன், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதனைச் சமர்ப்பிப்பதாக இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம். மன்சூர், ஏ.எல்.எம். நஸீர், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச். வாசித், அட்டாளைச்சேனை பிரதேசசபை தவிசாளர் நபீல் அமானுல்லாஹ் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஜ)

காலைக்கதிர் Kalaikkathir



### நடப்பு வருட முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்பேர்னில் தொடங்குகிறது

மெல்பேர்ன்,ஜன,12

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுகிறார். அதேவேளையில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தனது முதல் சுற்றில் உஸ்பெகிஸ்தானின் இஸ்தோமினை சந்திக்கிறார்.

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் வரும் 14 ஆம் திகதி மெல்பேர்ன் நகரில் தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டது. இதில் 7 ஆவது முறையாக பட்டம் வெல்லும் முனைப்புடன் உள்ள முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், முதல் சுற்றில் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோகோவிச், 2 ஆவது சுற்றில் பிரான்ஸின் சோங்காவுடன் மோதக் கூடும். நடப்பு சாம்பியனான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரருக்கு போட்டித் தரவரிசையில் 3 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. அவர், தனது முதல் சுற்றில் 99 ஆம் நிலை வீரரான உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்தோமினுடன் மோதுகிறார். பெடரர் அரை இறுதியில் ஸ்பெயினின் ரபேல் நடாலுடன் மோத வாய்ப்பு உள்ளது.

போட்டித் தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள ரபேல் நடால் தனது முதல் சுற்றில் 238 ஆம் நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்துடன் மோதுகிறார்.

4 ஆம் நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஜிவெரேவ், சுலோவேனியாவின் அல்ஜாஸ் பெடனையும், கடந்த முறை 2 ஆவது இடம் பிடித்த குரோஷியாவின் மரிச் சிலிச், ஆஸ்திரேலியாவின் பெர்னார்ட் டாமிக்குடனும் தங் களது முதல் சுற்றில் மோதுகின்றனர். 3 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ள இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே தனது முதல் சுற்றில் 22 ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ராபர்ட்டோ பவுதிஸ்டா அகுட்டை சந்திக்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லி யம்ஸுக்கு போட்டித் தரவரிசை யில் 16 ஆவது இடம் கொடுக்கப் பட்டுள்ளது. அவர் தனது முதல் சுற்றில் ஜெர்மனியின் தட்ஜனா மரியாவுடன் மோதுகிறார். மார்கரட் கோர்ட்டின் 24 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை சாதனை செய்யும் முனைப்புடன் களமிறங்கும் செரீனாவுக்கு போட்டி அட்டவணை கடும் சவால் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

செரீனா கால் இறுதிக்கு முந்தைய சுற்றில் முதல் நிலை வீராங்கனையான ருமேனியாவின்



சிமோனா ஹாலப்பை சந்திக்க வாய்ப்பு உள்ளது. இந்த சுற்றை கடந்தால் கால் இறுதியில் 7 ஆம் நிலை வீராங்கனையான செக்குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா வுடன் செரீனா மோதக்கூடும்.

காயம் காரணமாக 4 மாதங் களுக்குப் பிறகு களத்துக்கு திரும்பியுள்ள சிமோனா ஹாலப் தனது முதல் சுற்றில் எஸ்டோனி யாவின் கயா கனேபியுடன் மோதுகிறார்.

நடப்பு சாம்பியனான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி தனது முதல் சுற்றில் பெல்ஜியத்தின் அலிசன் வானை எதிர்கொள்கிறார். வோஸ்னியாக்கி 3 ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ரபோவாவை எதிர்கொள்ளக்கூடும்.

## ஓய்வு பெற்றார் அல்பி மோர்கல்



கேப்படவுண்,ஜன.12

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் அல்பி மோர்கல் அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்.

37 வயதான அல்பி மோர்கல் ஒரு டெஸ்ட், 58 ஒருநாள் போட்டி மற்றும் ஐம்பது ரி 20 போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்காக விளையாடினார். அவர் ஒருநாள் போட்டி மற்றும் ரி 20 போட்டிகளில் வெற்றிகரமாக ஆட்டத்தை முடிப்பதில் சிறந்தவர்.

## இந்தியாவுக்கான சுற்றுப்பயணம் ஆஸி. போட்டி அட்டவணை வெளியீடு

மும்பை, ஜனவரி. 12

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து இரண்டு ரி 20 , 5 ஒரு நாள் போட்டி களில் விளையாடவுள்ளது.

இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி முதலாவது ரி 20 போட்டி பெப்.24 ஆம் திகதி பெங்களூருவிலும், 2 ஆவது 20 ஓவர் போட்டி பெப்.27 ஆம் திகதி விசாகப்பட்டினத்திலும் நடக்கிறது.



அதைத்தொடர்ந்து ஒரு நாள் போட்டி கள் ஹைதராபாத் (மார்ச் 2,), நாக்பூர் (மார்ச் 5), ராஞ்சி (மார்ச் 8), மொகாலி (மார்ச் 10), டெல்லி (மார்ச் 13) ஆகிய இடங்களில் இடம் பெறவுள்ளன.

ஒரு நாள் போட்டிகள் பிற்பகல் 1.30 மணிக்கும்,ரி 20 போட்டி இரவு 7 மணிக்கும் தொடங்கும்.

# இலங்கையுடனான ரி 20 போட்டியையும் வெற்றி கொண்டது நியூஸிலாந்து

இலங்கைக்கு எதிரான ஒரேயொரு ரி 20 போட்டியிலும் நியூஸிலாந்து அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

எடன் பார்க்கில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு நியூஸிலாந்து அணியை பணித்தது.

அதன்படி முதலாவதாக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணியின் வீரர்கள் இலங்கை அணியின் பந்து வீச்சுக்களை சமாளிக்க முடியாது, அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

குப்டில் ஒரு ஓட்டத்துடனும், முன்ரோ 16 ஓட்டத்துடனும், டிம் சைபெட் 2 ஓட்டத்துடனும், ஹென்றி நிக்கோல்ஸ் 4 ஓட்டத்துடனும், மிட்செல் சாண்ட்டர் 13 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனால் நியூஸிலாந்து அணி 9 ஆவது ஓவரின் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து ஆறாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்தாடிய ரோஸ் டெய்லர் மற்றும் டக் பிரஸ்வெல் அதிரடிகாட்ட நியூஸிலாந்து அணி 14.2 ஓவர்களுக்கு 100 ஓட்டங்களை குவித்தது. டெய்லர் 32 ஓட்டத்துடனும், டக் பிரஸ்வெல் 20 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

எனினும் அதே ஓவரின் 5 ஆவது பந்தில் 37 பந்துகளை எதிர்கொண்ட டெய்லர் 33 ஓட்டத்துடன் திஸர பெரேராவின் பந்து வீச்சில் திக்வெல்லவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து ஆடுகளம் நுழைந்த கொட் கேலினுடன் சேர்ந்தாடிய பிரஸ்வெலும் 17.3 ஆவது ஓவரில் 26 பந்துகளை எதிர்கொண்டு 5 ஆறு ஓட்டங்கள் ஒரு நான்கு ஓட்டங்கள் என அதிரடியாக விளாசி 44 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 7 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கொட் கேலன் மற்றும் டிம் சவுத்தி தொடர்ந்து அதிரடி காட்டி நியூஸிலாந்து அணி 20 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 180 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

பதிலுக்கு 180 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி முதல் ஓவரிலேயே சமரவிக்கிரமவின் விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்தும் சீரான இடைவெளியில் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட 16.5 ஓவரில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணி சார்பாக திசர பெரேரா 43, குஷல் பெரேரா 23,திக்வெல்ல 18 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். பந்து வீச்சில் பெர்கியூசன், சோதி இருவரும் தலா 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக டக் பிறேஸ்வெல் தெரிவானார். முன்னதாக டெஸ்ட், ஒருநாள் போட்டியையும் நியூஸிலாந்து அணி வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## மஹிந்த அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவையில் நேற்று உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியவை வருமாறு:-

இனவாதத்தைத் தூண்ட வேண்டாம், குரோதத்தை விதைக்க வேண்டாம் என மஹிந்த ராஜபக்ஷ சற்று நேரத்துக்கு முன்னர் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

ஆனால், அவரும் அவரின் சகாக்களுமே விகாரை, விகாரையாகச் சென்று மக்களைக் குழப்பும் வகையில் இனவாதக் கோணத்தில் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஏப்ரல் மாதத்துக்குள் நாடு பிளவுபடும், சமஷ்டி அரசமைப்பு உருவாகும், 09 பொலிஸ் நிலையங்கள் உருவாகும் என்றெல்லாம் அறிவிப்புகளை விடுத்து வருகின்றனர்.

10 வருடங்கள் ஜனாதிபதிப் பதவியை வகித்த ஒருவர் கூட, புதிய அரசமைப்பு தொடர்பில் போலிக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். இது அவருக்கு வெட்கமில்லையா?

கிராமமொன்றுக்கு சென்று பொய்யுரைத்தால்கூட பரவாயில்லை. ஆனால், விகாரை விகாரையாகச் சென்று, வழிபாடுகளில் ஈடுபட்டு – பிரித் நூல்களை கட்டியபடி புத்தபெருமானின் முன்னிலையிலேயே பொய்யுரைக்கின்றனர். இது தகுமா?

புதிய அரசமைப்பு ஊடாக நாடு பிளவுபடாது. அதற்கு ஜே.வி.பி. இடமும் அளிக்காது.

அரசமைப்பு யோசனைக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அதன்பிறகு ஓர் அடியேனும் முன்வைக்க முடியாது. எனவே, வீண்பரப்புகளை களை முன்வைக்கவேண்டாம் – என்றார். (ஐ)

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெற்கில் உள்ளவர்கள் மதிப்பிடுகின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன், வடக்கு அபிவிருத்திக்கு முழுமையான நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அரசமைப்புப் பேரவை பிரதிச் சபாநாயகர் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கூடியது.

புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபையில் முன்வைத்தார்.

அதன்பின்னர் உரையாற்றிய மனோ,

கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்துகொண்டு பார்க்கும் அரசியல்வாதிகளுக்கு, வடக்கில் எதனை அபிவிருத்தி செய்யவேண்டும், எங்கு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது தெரியாது.

எனவே, வடக்கில் அபிவிருத்திப் பணிகளைப் பூரணமாக முன்னெடுக்க, அங்கு முழுமையாக நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

அன்று, பண்டாரநாயக்க காலத்தில் அவரால் சமஷ்டி குறித்து பேச்செழுப்பப்பட்டபோது, சமஷ்டியானது அதிக நன்மை பயக்கும் என்பதை கருத்திற்கொண்டே தெற்கு அரசியல்வாதிகள் அதனை எதிர்த்தனர் – என்றார். (ஐ)

## மஹிந்த தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய அரசமைப்பு நாட்டுக்கு ஆபத்தானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் அவசியம். இந்த விவகாரத்தைத் தவறான வகையில் தூக்கிப் பிடித்து சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தைத் தூண்டும் நடவடிக்கையில் மஹிந்த அணியினர் ஈடுபடுவதை உடன் கைவிடவேண்டும் எனவும் அவர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார்.

அரசமைப்புப் பேரவை பிரதிச்சபாநாயகர் ஆனந்தகுமாரசிறி தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கூடியது.

இதன்போது புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

அதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார். புதிய அரசமைப்பு நாட்டுக்கு ஆபத்தானது எனவும், அது இப்போதைக்குத் தேவையில்லை எனவும் மஹிந்த தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றும்போதே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷ அணியினரே நீங்கள் தேசப்பற்றாளர்களாக நடிக்க வேண்டாம். நீங்கள் போலியான தேசப்பற்றாளர்கள். நீங்கள் படுமோசமானவர்கள். சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தைத் தூண்டுகின்றீர்கள்.

நீங்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுக்க பல சர்வதேச நாடுகள் உதவின. இந்தியா உள்ளிட்ட அந்த நாடுகளிடம் புதிய அரசமைப்பைக் கொண்டுவருவோம் எனவும், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணுவோம் எனவும் வாக்குறுதியளித்தீர்கள். இதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசமைப்பு நாட்டுக்கு மிகவும் அவசியம். இதனூடாக மூவின மக்களும் ஒற்றுமையுடன் – நல்லிணக்கத்துடன் – சம உரிமையுடன் – அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுடன் வாழ முடியும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படவேண்டும். அதையடுத்து பொதுமக்களின் கருத்தறிய விட வேண்டும். இதற்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை – என்றார். (ஐ)

## புதிய அரசமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பு உருவாக்கச் செயற்பாடுகளிலிருந்து இறுதிவரை பின்வாங்கப் போவதில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று கூடிய அரசமைப்புச் சபையில் புதிய அரசமைப்பு தொடர்பான யோசனையை முன்வைத்து உரையாற்றிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பு உருவாக்கத்தில் உள்ள பிரதான தமிழ்க் கட்சி என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது.

இந்நாட்டின் அரசமைப்பு அனைவரது ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டது என்ற அடிப்படையில் எமது பங்களிப்பை வழங்கியுள்ளோம்.

இரண்டு பிரதான தரப்புகளும் இதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான இந்தப் பொன்னான தருணத்தை நாம் இழந்துவிடக் கூடாது.

இதேவேளை, புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்ட அறிக்கை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் அரசுடன் இணையவேண்டும். அமைச்சுப் பதவிகளைப் பெற்று வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பு அரசுடன் இணைவதால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும், பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான், ஆளுங்கட்சியில் அங்கம் வகித்ததால் மலையகத் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கு அச்சுறுத்தல் – பாதிப்பு ஏற்பட்டதா? இல்லை.

அதேபோல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாக அங்கம் வகிப்பதால் முஸ்லிம் மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா? இல்லை.

எனவே, எதிர்ப்பு அரசியலைக்கைவிடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்ப அரசுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணையவேண்டும்.

கடந்த 50 வருடங்களில் வடக்கு பகுதியில் பெரிதாக எவ்வித தொழிற்சாலையும் உருவாக வில்லை. வேலையில்லாப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

அதேவேளை, காலைநிலை மாற்றத்தால் இன்னும் 40 ஆண்டுகளில் வடக்கு பகுதி அரைப்பாலைவனமாக மாறக்கூடும். அதை சமாளிப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆராய வேண்டும் – என்றார். (ஐ)

## ஓர் இனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிச் சபாநாயகர் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கூடியது.

புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபையில் முன்வைத்தார்.

அதன்பின்னர் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் –

புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு இந்த நாடாளுமன்றம் ஏற்புடையதல்ல. அரசமைப்பைக் கொண்டுவரும் தரப்பு கடந்த உள்ளாட்சிச்சபைத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தது.

எனவே, இதுவிடயத்தில் மக்களின் நிலைப்பாடு என்னவென்பது அறியப்படவேண்டும். மாகாணசபைத் தேர்தல் கூட இழுத்தடிக்கப்பட்டுவருகின்றது. எனவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய சூழ்நிலை இது கிடையாது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வோம். புதிய அரசமைப்பு தொடர்பில் நீங்கள் உங்கள் தரப்பு யோசனையை முன்வையுங்கள். நாங்கள் எமது தரப்பு யோசனையை முன்வைக்கின்றோம். மக்கள் முடிவெடுக்கட்டும். அதன்பின்னர் நாடாளுமன்றம் ஆராயட்டும் – என்றார். (ஐ)

## வடக்கில் இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாண அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இராணுவம் நிலை கொண்டிருந்த அனைத்து இடங்களிலும் சர்வதேச கண்காணிப்புடன் மனிதப்புதைகுழி தொடர்பான ஆய்வுகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மிக நீண்ட வரலாறு இந்த மண்ணுக்கு உண்டு. மன்னார் புதைகுழி என்பது மனித குலத்திற்கு எதிரான மனங்களை உலுக்குகின்ற சம்பவமாக உள்ளது. குறிப்பாக 26ற்கு மேற்பட்ட குழந்தைகளுடைய எலும்புக் கூடுகள் அங்கு மீட்கப்பட்டுள்ளன. இதுமட்டுமல்ல இரும்பு சங்கிலியால் கட்டப்பட்ட எலும்புக் கூடுகளும் அங்கு மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுக்குச் சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும். ஏனெனில் இலங்கையில் அரசில் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் நிலை கொண்டிருந்த அனைத்துப் பகுதிகளிலும் மனிதப் புதைகுழிகள் உள்ளன. எனவே இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதிகளிலும் ஆய்வுகள் செய்யப்படவேண்டும்.

ஏனெனில் ஏராளமான மக்கள் காணாமல் போயுள்ளார்கள். எங்களிடம் சரியான புள்ளிவிவரங்கள் இல்லை.

இன்று கூட இந்திய இராணுவத்தின் 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடலில் வைத்தும், வீடுகளில் வைத்தும் தமது உறவுகள் காணாமற்போயுள்ளார்கள் என்று என்னிடத்தில் வந்து பதிவு செய்கின்றவர்கள் உள்ளார்கள்.

சர்வதேச நாடுகளின் உதவிகளை நாட வேண்டிய நிலையில் தமிழர்கள் உள்ளார்கள். ஏனெனில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் காணாமற்போன தமது உறவுகளில் எச்சங்களாக இருக்கலாம் என்று அஞ்சுகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மண்டைதீவு உட்பட மேலும் பல தீவுகளில் மனித புதை குழி உள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அனைத்து அரசியல் தலைவர்களும், பொது அமைப்புக்களும் சர்வதேச உதவியினை நாட வேண்டும் – என்றார். (ஐ)

## வடக்குப் பாட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்த விடுமுறைக்கான மாற்றுப் பாடசாலை தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நல்ல செய்தி வரும்.

– இவ்வாறு நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

'மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து 11 மாதங்கள் சிறையிலிருந்த அர்ஜுன் அலோசியஸுக்குப் பிணை வழங்க முடியும் என்றால், 11 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு ஏன் பிணை வழங்க முடியாது?' என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று நீதி அமைச்சர் தலதா அத்துகோரள விடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு நல்ல தீர்மானம் எடுக்கவுள்ளது. இது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது. இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விரைவில் அறிவிப்போம் – என்றார். (ஐ)

## புதிய அரசமைப்பினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவை பிரதிச்சபாநாயகர் ஆனந்தகுமாரசிறி தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கூடியது.

இங்கு உரையாற்றும்போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் ஒற்றையாட்சியை, பாதுகாப்பதற்கு அதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரே நாட்டுக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவது, தேர்தல்முறை, நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறையை நீக்குதல் போன்றன தொடர்பிலும் பேச்சு நடத்தப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்னிலங்கையில் வலுத்த வண்ணமுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் மஹிந்த – மைத்திரி தரப் பின் உள்வீட்டில் கடும் குடுமிச் சண்டை நிலவுவதாக உள்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீண்டும் மைத்திரியே ஜனாதிபதியாகப் போட்டியிடுவார் என்றும் மஹிந்த வின் தாமரை மொட்டு அணியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மஹிந்த ராஜபக்ஷவே தீர் மானிப்பார் என்றும் கூறி வருகின்றனர்.

குறிப்பாக கடந்த இரண்டு நாள்களாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மஹிந்த சமரசிங்க, துமிந்த திஷா நாயக்க மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் மைத்திரிபால சிறி சேனவே போட்டியிடுவர் என்றும் கூறியுள்ளனர். இதனை மஹிந்த ராஜபக்ஷ பகிரங் கமாக அறிவிக்க வேண்டும் என்பதும் அவர்களின் எதிர்பார்ப்பாக நிலவிவருகிறது.

மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்க வேண்டும் என்று நிமால் சிறிபால டி சில்வா, கூறியதை மறுதலித்துள்ள மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப் பினரான காஞ்சன விஜேசேகர, நான்கு வருடம் நிமல் சிறிபால தூங் கிக் கொண்டிருந்தாரா? இப்போது பகற் கனவு காணுகிறார். என்று தனது டுவிட்டர் தளத்தில் கடுமையாகச் சாடியுள்ளார்.

மேலும் ரொஷான் ரணசிங்க என்ற நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி வேட்பாளரை மஹிந்தவே தீர்மானிப்பார் என்று செய்தியாளர்களிடம் அடித்துக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த – மைத்திரி தரப்பினின் கூட்டிணை வான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்புக்குள்ளேயே பலத்த மோதல்கள் உருவாகலாம் என அரசியல் அவதானிகள் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியக் கல்விக் கண்காட்சி பெப்ரவரி யாழ்ப்பாணத்தில்

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட் டில் இந்தியக் கல்விக் கண்காட்சி பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி மூலம் இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்கள் இந்தியாவில் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கண்காட்சி எதிர்வரும் பெப்ரவரி 11ஆம், 12 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரை யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த கற்கைநெறிகளைக் கொண்ட சுமார் 10 இற்கு மேற்பட்ட தமிழகப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இந்தக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

இந்தக் கண்காட்சியில் பங்கேற்கும் மாண வர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் கற்கைநெறியில் 30 தொடக்கம் 50 வீதம் வரையான கட்டணக் கழிவு வழங்குவதோடு கண்காட்சியில் வைத்தே பல்கலைக்கழகங்களுக்கான உடனடி அனுமதியும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கண்காட்சியின்போது கற்கைநெறிகள் தொடர்பான விளக்கங்களுடன் பங்குபற்றும் மாணவர்களுக்கு எதிர்காலத் தொழில் வாய்ப்பு தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தமிழ்மொழி மூலமான மாணவர்கள் இந்தியாவில் கற்கைநெறிகளை தடையின்றித் தொடர ஆங்கில மொழி விருத்தியைத் தூண்டும் வகையில் கற்கைநெறிகளுக்கு ஆரம்பநிலை ஆங்கிலக் கற்கைகள் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும்.

கல்விக் கண்காட்சியில் பங்கேற்று தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும் மாணவர்களில் இருந்து இரு தினமும் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு 'ரப்' ஒன்று அவருக்குப் பரிசாக வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்கு இந்தியத் தூதரகம் முன்னுரிமை அடிப்படையில் விசா வழங்குவதற் கான ஏற்பாடுகளை வழங்கும்.

இந்திய அரசால் வழங்கப்படும் நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில், மவுலானா ஆசாத் புலமைப்பரிசில், ராஜீவ் காந்தி புலமைப் பரிசில், கொமன்வெல்த் புலமைப் பரிசில்கள் பட்டக்கல்வி முதல் முதுநிலை கல்வி வரை வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புலமைப்பரிசில் விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி ஜனவரி 25ஆம் திகதி ஆகும். புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பவர்கள் அவை தொடர்பான மேலதிக விவரங்களை www.mohe.gov.lk என்ற இணையத்தில் பார்வையிட முடியும். இவை தொடர்பில் மேலதிக விளக்கங்களை அலுவலக நாள்களில் இந்தியத் துணைத் தூதரகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் – என்றார். (ஐ – 07)

# பாடசாலை அதிபர், ஆசிரியர்களை மாணவர்கள் சிலர் தாக்க முயற்சி!

## நாவற்குழியில் நேற்றுப் பெரும் பதற்றம்





யாழ்ப்பாணம், ஜன. 12

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபர் மற்றும் ஆசிரியர்களை மாணவர்கள் சிலர் தாக்க முற்பட்டதால் பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து பாடசாலை மாணவர்கள் ஒன்று திரண்டு ஆசிரியர்கள், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரிப் பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

குறிப்பிட்ட சில மாணவர்கள் பாடசாலையின் ஒழுக்க விதிகளை மீறியும் ஏனைய மாணவர்களை அச்சுறுத்தும் விதத்திலும் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்துள்ளனர்.

இவர்கள் பாடசாலைக்கு வெளியிலும் சமூகச் சீர்கேடான விடயங்களிலும் குற்றச்செயல்களிலும் ஈடுபடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதனால் அந்த மாணவர்களைக் கண்டித்த ஆசிரியர்களை அவர்கள் அச்சுறுத்தியமையால் ஆசிரியர்கள் சிலர் மாற்றலாகியும் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட மாணவர்களைப் பாடசாலையில் ஒழுக்கமாகவும் பாடசாலையின் கௌரவத்தைப் பேணும் வகையிலும் நடந்துகொள்ளுமாறு அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனால் அந்த மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் அல்லாத வெளியாள்களோடு இணைந்து நேற்று முற்பகல் 11 மணிக்கு பாடசாலைக்குள் நுழைந்து அதிபர் மற்றும் ஆசிரியர்களைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்று திரண்டு மூன்று பேரைப் பிடித்துச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்களில் இரண்டு





மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பாடசாலைக்கு முன்பாக ஒன்று திரண்ட மாணவர்கள் தமது பாதுகாப்பையும் அதிபர், ஆசிரியர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கோரியும் ஒழுக்கமற்ற மாணவர்களைப் பாடசாலையில் இருந்து விலக்குமாறு கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நாவற்குழி பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களோடு பேச்சு நடத்தினர்.

இதன்போது இன்று பாடசாலைச் சமூகம், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

பாடசாலை மாணவர்களின் இந்தப் போராட்டத்துக்குப் பழைய மாணவர்கள், கிராம மக்கள் என அனைவரும் ஆதரவு தெரிவித்து ஒன்றுதிரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ–07)

# மாணவர்களுக்கு போதை ஏற்றும் மருந்துகள் வழங்குவோர் மீது உச்சக் கட்ட நடவடிக்கை

## *சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 12

மாணவர்களுக்கு போதை ஏற்றும் மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்கள் மீது உச்சகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

வலி. வடக்கு மீள் குடியேற்றப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் 14 வயதுடைய 3 மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு மருந்தை போதைப் பொருளாக பாவித்தமை காரணமாக போதை தலைக்கேறிய நிலையில் பாடசாலை சமூகத்தால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த மூன்று மாணவர்களும் விசாரணை செய்யப்பட்போது அவர்களின் தகவல்களின் அடிப்படையில் அப்பிராந்தியத்தில் உள்ள குறிப்பிட்ட மருந்தகங்களில் இருந்தே அம்மருந்து இவர்களுக்கு கிடைக்கப்பெற்றதாக அறியக்கூடிதாக உள்ளது.

அந்த அடிப்படையில் சுகாதார பகுதியினரால் அம் மருந்தகங்கள் பரிசோதனை செய்யப்பட்போது சில மாணவர்களுக்கு மேற்படி மருந்துகள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கப்பெற்றன. இம் மருந்துகள் மாணவர்களுக்கு எவ்வித வைத்திய பரிந்துரைகளும் (Prescription) இன்றி வழங்கப்பட்டுள்ளமையை அறிய கூடியதாகவுள்ளது.

இது தொடர்பாக சுகாதாரப்பகுதியினரும் விரைந்து சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். மேலும் சுகாதாரப்பகுதியினர் பாடசாலைச் சமூகத்துடன் தொடர்புகொண்டு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தினருக்கான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பிரதேச செயலருடன் இணைந்து கிராம மட்டங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதாரப்பகுதியினர் இவ்வாறான நடவடிக்கைகள் வேறு பகுதிகளிலும் மருந்தகங்களிலும் வேறு மட்டங்களிலும் நடைபெறுகின்றனவா எனப் பரிசோதிப்பதற்கான நடிவடிக்கையை உரிய தரப்பினருடன் இணைந்து மேற்கொள்ள உள்ளனர். அவ்வாறு அறியப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எதிராக உச்ச நடிவடிக்கை எடுக்கப்படும் என்பதனைச் சுகாதாரப்பகுதியினர் அறியத்தருகின்றனர்.

இத்துடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகள், அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் நிகழ்வுகள் குறித்து மிகவும் கவனமாகவும் அன்னியோன்னிய அவதானிப்புடனும் இருப்பது மிகவும் முக்கியம் என்பதனையும் சுகாதாரப் பகுதியினர் வலியுறுத்துகின்றனர். – என்றுள்ளது.

# தேர்தல் பிரசார செலவுகளை மட்டுப்படுத்தச் சட்டவரைவு

கொழும்பு, ஜன. 12

தேர்தல் பிரசாரச் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையிலான சட்டவரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை நாடாளுமன்றத்தில் தனி நபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளிடம், தேர்தல் கண்காணிப்பு நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு நிலையம் மற்றும் 'பவ்ரல்' அமைப்பினால் இந்த சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.